Registered as a News Paper

பக்கம் – 16


# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—02 07—13 மார்ச் 2003





## விடைகொடுப்பும் வரவேற்பும்





## பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் முதலாவது கூடல்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 07 .03.2003

# சிறுபொறி - பெரு நெருப்பாகும்...

"களுத்துறைச்சிறைக்கைதிகள் தமக்கான விடுதலையை வேண்டிமீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்."

இது ஒரு சாதாரணமான - இடைக்கிடை வெளிவரும் செய்தியாகவே அனுபவப்படும் விடயமாகப் போய்விட்டது.

அந்த நியாயம் கோரும் அப்பாவிக்கைதிகள் தமது குரலை உயர எழுப்பும்போதெல்லாம், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நம்பிக்கை வாக்கு றுதிகளை மட்டும் வாக்காளர் முன் தேர்தல்காலத்தில் தோன்றி மறையும் வேட்பாளர்கள் போன்று அளித்து, அவர்களது போராட்டத்தின் வேகத்தை தணித்து அடக்கி நிறுத்திவிட்டு மீண்டும் வழமைபோல் அவர்களைச் சுலபமாக மனிதாபிமானமற்ற முறையில் மறந்து விட்டு தமது சுய இலக்குகளை எட்டுவதற்கான தேடல்களில் இறங்கிவிடுகிறார்கள். வருடக்கணக்கில் நீதி மறுக்கப்பட்டு, நியாயம் புறக்கணிக்கப்பட்டு அதிகார அரசியலில் இருப்பவர்களின் சுய அபிலாசைகளுக்காக, அரசியல் நோக்கங்களுக்காக சிறையில் - மனிதநேயத்தை புறக்கணிக்கும் கறுப்புச் சட்டங்களின் கீழ் காவலில் வைக்கப் பட்டிருக்கும் இந்தமனிதர்களின் குரல்கள் எவருக்குமே கேட்பதில்லை. அவர்களின் ஆற்றாமை, ஆத்திரம் வெறுப்பு, விரத்தி அனைத்தும் ஒன்றாகச் சூல் கொண்டு மரணத்தை எதிர்கொள்ளவும் தயாராகி ஒரு ஜீவமரணப் போராட்டத்தை முன்னெடுக் கையில் மாத்திரம் எங்கிருந்தோ வந்து சேரும் இந்த சமரச ஏற்பாட்டாளர்கள் அவர்களின் போராட்டத்தை நிறுத்த -தமது அரசியல் எஜமானர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை தவிர்க்கும் நோக்குடன் மட்டும் - வாக்குறுதிகளை மட்டும் - வெறுமனே நம்பிக்கையை மட்டும் வழங்கி, அவர்களை அமைதியாக தமது சிறைவாசத்தை தொடரும் படி விட்டுவிடும் வகையில் நாடகமாடிவிட்டு மறைந்து விடுகின்றார்கள். அந்த அப்பாவி ஜீவன்களின் விடுதலை குறித்த நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பை மறந்து விடுகி றார்கள்.

இதெல்லாமே இந்த 'வெத்துவேட்டு' அரசியல் வாதிகளின் அரசியல் ஏமாற்று தந்திரோபாயம் என்பதை அந்த சிறைப்பறவைகள் ஒரு போதுமே உணர்வதில்லை. அவர்களின் இயலாமையும், நம்பிக்கை கொள்ளும் மன இயல்பும் அவர்களைத் தொடர்ந்தும் ஏமாறவைத்தே வந்துள்ளது.

மனித உரிமைகள் பற்றி வாய்கிழியப் பேசி அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு, எழுத்துக்களில் பதிவுகளை மேற்கொண்டு விட்டால் மட்டும் தத்தமது கடமை முடிந்து விடுகிறது என நம்பும் புத்தி ஜீவிகளின் கூட்டங்களின் வாதப்பிரதிவாதங்களுக்கும், அதிகங்கள் காணும் இவர்களின் இயல்புக்கும் இந்த அப்பாவி சிறைவாசிகளின் கண்ணீரும், நெடுமூச்சும், விடுதலை குறித்த தொலைதூரக் கனவும், உற்சாகமூட்டும் உணவாகிவிடுகின்றன.

ஆனால் அவர்கள் சிறைக்குள் வாடுகிறார்கள் வதங்குகிறார்கள் போராட்ட சமயங்களில் ரட்சகர்கள் போல் விரைந்து செல்லும் இந்தப்பிரமுகர்கள், புத்திஜீவிகள், மனித உரிமை அமைப்புகள், அரசியல் சுயநலமிகள் அனைவருக்கும் அவர்கள் காட்சிப் பொருள்களாகின்றனர். ஊடகவியலாளர்களுக்கு அவர்கள் பேட்டி மூலங்களாகவும் செய்திப் பொருள்களாகவும் மாறுகின்றனர்.

எல்லாமே அடுத்த பிரச்சினையும், செய்தியும் முக்கித்துவமானதாகக் கருதப்படும்வரைதான். அதற்குப் பிறகு..?

அவர்கள் அவர்களாகவும், இவர்கள் இவர்களாகவும் அப்படியே மாறிவிடுகின்றனர்.

வாக்குறுதிகள் காற்றோடு போய்விட, போராட்டங்கள் செய்திகளாக மட்டும் நிலைத்துவிட, நம்பிக்கை கனவான நிலையில் சிறையையின் கம்பிகளினூடாக வெளியே சுதந்திரமாக பறக்கும் பறவைகளை வெறித்துப் பார்த்தபடி இருக்கும் விழிகள் உருக்கும் கண்ணீர் எவருக்கும் தெரியாது. எவரும் அறிய விரும்புவதுமில்லை நீதி தேவதையின் கரங்கள் கறுப்புத் துணியால் நிரந்தரமாகக் கட்டப்பட்ட நிலையில் அதன் பார்வைக்கு தெரியாத நீதித்தராசியின் நியாயமுள்ளின் தடுமாற்றத்தை அதனால் முழுமையாகப் புரிந்து கொள்ளவே முடியாது.

சட்டம் புத்தகங்களில் தூங்குகிறது, நீதி சிறையுள் அழிகிறது, உண்மை மனநோயாளியாகி உலைகிறது. மனித உரிமைகள் நீதிமன்ற வளாகங்களுள் அல்லாடிக் கிடக்கிறது...

இந்தநிலையில் களுத்துறைச் சிறைச்சாலைக்கைதிகள் அடிமைச் சிறைவாழ்வைவிட, சுதந்திரமரணம் மேலானது என நினைப்பது நியாயமானதே.. அதனை வாக்குறுதிகளை மட்டும் வழங்கி குழப்ப முயல்பவர்கள் மனித உரிமைகளுக்கு எதிரானவர்கள் தான்.

இந்த உண்ணா விரதத்தின் போது அவர்கள் சமுகமளிக்கவே செய்வர். பழைய கதைகளை தொடரவே செய்வர்... சிறைவாசிகளின் நெடுமூச்சின் உஷ்ணம் அவர்களைப் பொசுக்காதவரை, அவர்களின் விழிகளின் ஈரம் நெருப்பாகாதவரை, அவர்களின் போராட்ட உறுதி வெற்று வாக்குறுதிகளுள் சிறைப்படுவதை தகர்க்கும்வரை... இந்த நிலை தான் தொடரும்...

கைதிகளின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒரு சிறு பொறியாக தோன்றலாம்.... சிறு பொறி தான் பெரு நெருப்பாகும் என்பது வரலாறு உணர்த்தப் போகும் பாடமாகவும் இருக்கும்.

## தூரனின் பார்வை

# நமோ... நமோ... சிறிலங்கா மாதா...

'சிறிலங்காவின் அபிவிருத்தி மிக மோசமான அளவில் பின்னடைவு கண்டுள்ளமைக்கு கடந்த 30 ஆண்டுகளாக அதனை ஆட்சிபுரிந்த தலைவர்களே காரணம். அவர்களே அதற்கான பொறுப்பினை ஏற்க வேண்டும். தலைவர்களின் குறைபாடுகளே இந்த அவலநிலையை உருவாக்கியுள்ளது.'

இதனையாரும் அரசியல் விமர்சகர்கள் சொல்லியிருந்தால் அது அவரது கண்ணோட்டம் அல்லது அபிப்பிராயம் என ஒதுக்கி விடலாம்.

ஆனால் சொல்லியிருப்பவரோ அதே சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரணதுங்கவே தான்.

இதுதான் மேற்குறிப்பிட்ட விடயத்தை ஆழமாகப்பார்க்கவைத்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகள் என அவர் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறிய காலப் பகுதிக்குள் அவரது ஆட்சிக் காலமும் அடங்கும் என்பது தான் இங்கு முக்கியமான விடயம். ஆகவே சிறிலங்காவின் வளர்ச்சி பின்னடைவு காண்பதற்கான பொறுப்பினை ஏற்க வேண்டிய தலைவர்களுள் அவரும் ஒருவரே. அவர் வெளியிட்ட மேற்குறிப்பிட்ட கருத்து அவரது ஒப்புதல் வாக்குமூலமாகவே கருதக் கூடிய ஒன்றாக உள்ளது. அவர் இதனைக் கூறாவிட்டாலும் கூட, சிறிலங்காவின் பொருளாதாரப் பின்னடைவு, மனித வள இழப்பு, அரசியல் குழப்பம், உழல் - மோசடிகள் அதிகரிப்பு இனத்துவ முரண்பாடு எனத் தொடரும் பல்வேறு அவலங்களும், தமிழ் மக்களுக்கு எதிரான போரை அதியுச்ச நிலைக்கு தீவிரமாக்கி, 'சமாதானத்திற்கான யுத்தம், என்று அதற்கு மகுடமிட்டு, மக்களின் சனநாயக உரிமைகள் அனைத்தையும் தன்னிடம் குவிமையப்பட்டிருந்த அபரிமிதமான ஆட்சி அதிகாரங்களைப் பயன் படுத்தி பாதுகாப்புக்காரணங்களைக் கூறி மறுத்து இவர் நடத்திய ஏழாண்டுகால சர்வாதிகார ஆட்சியிலேயே மிக அதிகரித்த நிலையில் கோலோச்சின.

அவரே குறிப்பிட்டுள்ள அந்த 30 ஆண்டுகால ஆட்சிப் பகுதியில், அவரது ஏழாண்டு கால, ஆரவல்லி ஆட்சியே சிறிலங்காவுக்கு போரழிவையும், மீளவே முடியாத பின்னடைவையும் ஏற்படுத்தியதென்றால் அது உண்மையான ஒன்றே. ஆகவே சந்திரிகா தனது தலைமைத்துவத்தின் ஆளுமைத் திறனின்மையையும், அதன் காரணமாக சிறிலங்கா பின்னடைவை சந்தித்துள்ளமையையும் பகிரங்கமாக்வே ஏற்றுக் கொண்டுள்ளார்.

அந்த - அவர் குறிப்பிட்ட 30 ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்காவின் ஆட்சி பீடத்தை, சர்வாதிகாரிகளுக்குரிய அனைத்து அம்சங்களுடனும், அலங்கரித்த ஏனையவர்கள் விஷப்பாம்பு என்று முன்னாள் பிரதமர் ஒருவராலேயே வர்ணிக்கப்பட்டவரான ஜே.ஆர். ஜெயவர்த்தனா, இனக்கலவரங்கள் அனைத்தினதும் சூத்திரதாரிகளில் முக்கியநபரான பிரேமதாசா, வந்தேறு குடிகளென தமிழ்மக்களை வர்ணித்த டி.பி. விஜயதுங்க ஆகியோர்களே...

இவர்கள் அனைவரையும் தன்னைப் போல குறைபாடான தலைமைத்துவ ஆற்றல் கொண்டவர்கள் என கூறிச் சந்திரிகா சமநிலை வேண்டியுள்ளார்.

தேசத்தின் பேரழிவை அபரிமிதமாக அறுவடைசெய்யும், தொலைநோக்குச் சிந்தனையற்ற, இனவாத சிந்தனைகளை முதலில் விதைத்தவர் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை அமுல்படுத்திய சந்திரிகாவின் தந்தையான பண்டாரநாயக்காவே தான்.

அவர் விதைத்த விஷ வித்தை போஷித்து அதனை இராணுவப் பாதுகாப்புடன் வளர்த்தவர் அவரது தாயான சிறிமாவோ பண்டாரநாயக்காதான்.

தந்தையும் தாயும் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள பயன் படுத்திய பேரினவாத, பௌத்த மதவாத கோட்பாட்டுத் தத்துவங்களின் மேலேயே ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழின விரோதி சாம்ராஜ்யத்தை சுலபமாக நிறுவி அதன் அசைக்க முடியாத சக்கரவர்த்தியினால் அவரது சாம்ராஜ்யத்தை அடுத்து வந்த பிரேமதாசா அப்படியே தனக்கேயுரிய குணாம்சங்களுடன் நிலைப்படுத்திக் கொண்டார். அவரையடுத்து அந்த பதவிக்கு வந்த விஜேதுங்காவும் தன்பங்குக்கு அதனை அப்படியே ஆளத் தொடங்கினார்.

ஆனால் அந்த சாம்ராஜ்யத்தை, சர்வாதிகார ஆட்சிப் பாரம்பரியத்தை முற்றாகத் தகர்த்து ஓர் ஒப்பற்ற சனநாயக மரபை, போரற்ற சமாதான ஆட்சியை ஏற்படுத்துவேன் என்று கூறிக்கொண்டு 'மக்களை ஏமாற்றி' ஆட்சிபீடத்தைக் கைப்பற்றிய சந்திரிகா தனது ஏழாண்டுகால முழுமையான ஆட்சிக்காலப்பகுதிக்குள் முன்னைய மூவரும் 23 ஆண்டு களில் சாதித்த அனைத்தையும் விலாசமற்றுப்போகும் வகையில் 'யுத்த சன்னதம்' கொண்டு செய்து காட்டினார்.

சமாதான தேவதையாக உருமாறிவந்த ஒரு போர்க்காரிகையின் விஸ்பரூபம் அந்த ஏழாண்டு காலப் பகுதிக்குள் தமிழீழப்பகுதிகளை துவம்சம் செய்து தமிழ் மக்களின் வாழ்வை சிதைத்து, சிறிலங்காவின் அனைத்து வளங்களையும் 'கபளீகரம்' செய்து ஆடிய ஊழிக்கூத்தின் பதிவுகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வரலாறு.

இன்னமும் அவரது 'கலை' அடங்கவில்லையென்றே கூறவேண்டும்... இடைக்கிடை 'அருள்வாக்கு' கூறும் சாமியார்கள் மாதிரி சமாதானம் குறித்தும் அமைதி குறித்தும், நியாயத்தன்மை குறித்தும், அவ்வப்போது கூறினாலும் கூட அவருக்குள் 'கலை' யை ஏற்படுத்தி உருக் கொள்ளவைக்கும் அந்த இனவெறி - பதவிவெறிச் சாத்தான் இன்னமும் அப்படியே அடங்கி பேயாட்டம் ஆடத்தருணம் பாாத்துக் காத்திருக்கிறது என்பது தான் உண்மை.

மலேசியாவில் சமாதான ராகம் பாடும், விடுதலைப் புலிகளுடன் பேசாது தீர்வில்லை என்று ஞானோபதேசம் செய்தும், நாடு திரும்பியதும் ஜே.வி.பி. உபாசகர்களின் மந்திர உச்சாடனத்தில் 'உரு'க்கொண்டு கிளர்ந்தெழுந்து 'நான் யார் தெரியுமா? நான் நினைத்தால் எதுவும் செய்வேன்... ஒருவரும் என்னை அசைக்கவே முடியாது என ஆக்ரோஷம் செய்யும் சாத்தான் இன்னமும் அவருள் இறுக்கமாக ஓடிக்கொண்டே இருக்கிறது.

ரணில் ஆட்சியுடன் 'சகவாழ்வு' இசைவுடன் இணைந்து செயற்படத் தயார் என்று ஆரம்பத்தில் தான் தெரிவித்து அதன் படி விட்டுக் கொடுத்ததாகவும், தனது அதிகாரங்கள் புலவற்றை அவரிடம் கையளித்ததாகவும் கூறும் சந்திரிகா அடிக்கடி -அதுவும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னான ஓராண்டு காலப்பகுதிக்குள் எத்தனை தடவைகள் 'ரணிலின்' ஆட்சியைக் கவிழ்க்கும் தனது அதிகாரபலத்தை நினைவூட்டி எச்சரிக்கை அச்சுறுத்தல்களை விடுத்திருப்பார். எத்தனை வகையிலான முயற்சிகளை சமாதான நகர்வுகளை குழப்பும் வகையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்டிருப்பார், அமைதி முயற்சிகளில் அனுசரணை புரிய முன்வரும் சர்வதேச நாடுகளை அவர்களின் முன்முயற்சிகளை அநாகரிகமான முறையில் புறந்தள்ளியிருப்பார் என்பது சிறிலங்காவின் சிங்களமக்களோ அல்லது சர்வதேச சமூகமோ அறிந்து கொண்டிருக்காத விடயமல்ல.

நோர்வே அனுசரணையாளர்கள் கண்டிக்கப்பட்டார்கள்...

ஜப்பான் தூதுவர் புறக்கணிக்கப்பட்டார்...

அமெரிக்க ஆலோசனைகள் விமர்சிக்கப்பட்டன...

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது...

தாய்லாந்தின் அனுசரணைகளை கைவிடும்படி மறைமுக - மதரீதியிலான

(15ம் பக்கம் பார்க்க...)

# இரண்டு கட்டளைப்பீடங்களும் சமாதானமும்

நிலாந்தன்



"உத்தரவிடும் அதிகாரம் எங்களுக்கில்லை அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரை எமக்குக் கீழ்ப்படியுமாறு நிர்ப்பந்திக்கும் அதிகாரம் எங்களுக்கில்லை....."

"எமது 47 உறுப்பினர்களும் யுத்தநிறுத்த மீறல்களைச் சுட்டிக்காட்ட மட்டும்தான் முடியும் அவளவுதான் எங்களால் முடியும். யுத்தநிறுத்த மீறல்களைக் கையாள எங்களிடம் படை இல்லை. எந்த உபகரணமும் இல்லை...."

இப்படிக் கூறியிருப்பவர் ஹாக்றப் ஹொக்லான்ட்; போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உபதலைவராய் இருப்பவர்.

கண்காணிப்புக் குழுவுக்குள்ள வரையறைகளை அவரது இக்கூற்று வெளிப்படுத்துகிறது. இது இப்பத்தியில் எற்கனவே சிலவாரங்களுக்கு முன்பு பிரஸ்தாபிக்கப்பட்ட ஒரு விவகாரம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி கடந்த ஒருவருடகாலம் முழுவதிலும் நிகழ்ந்த எல்லா யுத்தநிறுத்த மீறல்களின் போதும் நிரூபிக்கப்பட்டு வரும் விசயமும் இதுதான்.

இது பற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் யுத்தநிறுத்தக் கணிகாணிப்புக் குழுவின் முன்னால் தலைவர் ஜெனரல் றொன்ட் புரு ஹொவ்டே சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

"அநீதி இடம் பெறும் போது பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கஷ்ரமானது. அது மிகக் கனமானது. கண்காணிப்பாளர்கள் களைப்படைந்துவிட்டார்கள். இது மிகவும் தஞ்சக்கேடானது அவர்கள் அநேகம் மக்களைச் சந்திக்கிறார்கள் அதோடு மிக மோசமான அநீதி என்று அவர்கள் உணரும் அநேக நிலைமைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் அவர்களுக்கு எதையாவது செய்யும் அதிகாரம் கிடையாது இது அவர்களுக்கு மிகவும் விரக்தியூட்டுவது...."

"சில சமயங்களில் நான் எனது கண்காணிப்பாளர்களுக்கு ஒன்றை மனதில் வைத்திருக்குமாறு சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது - நாங்கள் இங்கேயிருப்பது ஆலோசனை கூறத்தான் எதையும் செய்வதற்கில்லை என்று....."

இப்படி கண்காணிப்புக் குழுவின் முந்நாள் தலைவரும் உபதலைவரும் கூறியிருப்பவை ஒன்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

நிகழும் சமாதான முயற்சிகளில் கண்காணிப்புக் குழு எதுவரை போகலாம் என்பதே அது.

ஈழப்போரின் கடந்த இரு தசாப்தகால சமாதான முயற்சிகள் மற்றும் யுத்த நிறுத்த மீறல்கள் போன்றவற்றின் திரட்டிய அனுபவத்திற்கூடாகச் சிந்திக்கும் எவருக்கும் இது அச்சமூட்டும்.

இப்படிப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் இயங்கும் ஒரு கண்காணிப்புக் குழுவினால் நிகழும் சமாதான முயற்சிகளை எவ்வளவு காலத்துக்குப் பாதுகாக்க முடியும்?

அதேசமயம் இப்படியொரு வரையறுக்கப்பட்ட அதிகாரமுடைய கண்காணிப்புக் குழுவினால் எந்த ஒரு தரப்பின மீதும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு தீர்வை வலிந்து திணித்து விட முடியாது என்பது ஒரு விதத்தில் பாதுகாப்பான ஏற்பாடுதான் என்று சிலர் வாதிடக் கூடும்.



உண்மைதான். ஒரு தீர்வை வலிந்து திணிக்கும் சக்தியற்றதாயிருக்கும் அதே சமயம் யுத்தநிறுத்த மீறல்களைப் பொறுத்தவரை கண்காணிப்புக் குழு ஒருவித கையாலாகாத சாட்சிபோல காணப்படுகிறது என்பதே இங்குள்ள யதார்த்தம்.

இந் நிலையில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஜெனரல் றொன்ட் புரு ஹொவ்டே அண்மையில் ஒரு பரிந்துரை செய்திருந்தார். அதில் சிறிலங்காப் பொலிசை நவீனப்படுத்த வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

படையினரின் பிடியில் உள்ள பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணும் பொறுப்பு முப்படைகளிடமிருந்து எடுக்கப்பட்டு பொலிசிடம் தரப்படுவதன் மூலம் யுத்தநிறுத்த மீறல்களை வெற்றி கரமாகக் கையாள முடியும் என்று அவர் கருதுவது போல தெரிகிறது.

இதில் முதலாவதாகத் தெளிவுபடுத்தப் படவேண்டிய ஓரம்சம் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வேறு. யுத்தநிறுத்த மீறல்கள் வேறு என்பது.

யாருடைய சட்டத்தை யாருடைய நீதியை யார் மதிப்பது என்பது.

சிறிலங்காவின் சட்டமும் நீதியும் பாரபட்சமானவை என்பதால் தானே இந்தப் போரே வெடித்தது. பிறகெப்படி அந்தச் சட்டம் நீதியின்படி யுத்தநிறுத்த மீறல்களை விசாரிப்பது?

இது ஒருபுறமிருக்க சமாதான முயற்சிகளின் ஒரு பகுதியாக சிறிலங்காப் பொலிசை நவீனப்படுத்தும் பரிந்துரைகள் ஏற்கனவே கடந்த ஆண்டிலேயே கூறப்பட்டவைதான்.

அப்பொழுது அவ்வாறு பரிந்துரைத்தவர் அயர்லாந்தின் பொலிஸ்மா அதிபர்.

அவர் ராணுவத்தின் பிடியில் உள்ள தமிழ்ப் பகுதிகளுக்கு ஒரு சுற்றுப்பயணம் செய்து விட்டு சிறிலங்காப் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் இப்படியொரு ஆலோசனையைக் கூறியிருந்தார்.

பொலிசை நவீனப்படுத்துவது என்று அவர் கூறியது - அரசியல் வேலைகளுக்காக ராணுவத்தின் பிடியில் உள்ள பகுதிகளுக்குச் செல்லும் புலிகளை உற்றுக் கண்காணிப்பதன் மூலம் அவர்கள் பொதுசனங்களை படையினருக்கு எதிராகத் தூண்டிவிடாதபடி பார்த்துக் கொள்வதற்குரிய வழங்களையும் திறன்களையும் பொலிசாருக்குப் பெற்றுக் கொடுப்பது என்ற அர்த்தத்தில்தான்.

ஆனால் ஜெனரல் ஹொவ்டே கூறுவது இத்தகைய அர்த்தத்தில் அல்ல. அது சற்றுப் பரந்த அர்த்தத்திலானது.

அதாவது சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் தரப்பட்ட ஒரு பொலிசை உருவாக்கி இனங்களுக்கிடையில் சமநிலையும் நீதியும் பேணப்படவேண்டும் என்ற தொனிப்படவே அவர் கதைக்கிறார்.

ஆனால் இது ஒரு இறுதித்தீர்வின் போதே சாத்தியப்படும்.

இப்பொழுது - அதாவது ஒரு இடைமாறு காலகட்டத்தில் அதைப்பற்றிச் சிந்திப்பது கஷ்ரம்.

எல்லா இனங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் தரப்படுவது என்பது சாராம்சத்தில் அதிகாரப்பகிர்வு பற்றிய ஒரு விவகாரமே.

இது பேச்சுவார்த்தைகளின் இறுதிக் கட்டத்தில் அதிகாரப் பகிர்வுக்குரிய ஒரு அலகைப்பற்றிய உரையாடலின் போது மட்டுமே தீர்மானிக்கப்பட முடியும்.

மேலும் சட்டம் ஒழுங்கை பொலிசிடம் தருவது என்பது அதன் சரியான அர்த்தத்தில் ஒரு சிவில் சமூகத்தையே குறிக்கும்.

ஆனால் உயர்பாதுகாப்பு வலயங்களில் மீளக் குடியமர்த்தும் விவகாரத்தில் ராணுவத்தின் நலன்களே முதன்மைப் படுத்தப்படும் ஒரு பின்னணியில் சிவில் சமூகம் ஒன்றைப்பற்றி உடனடியாகச் சிந்திப்பது நடைமுறையில் கஷ்ரம்.

நிகழும் சமாதான முயற்சிகளில் ராணுவத்தின் அபிலாசைகளை விடவும் சிவில் சமூகத்தின் அபிலாசைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு போக்கே வளர்ச்சி பெற்று வந்திருந்திருக்க வேண்டும்.

மாறாக, கடந்த ஓராண்டு காலமாக ராணுவம் பேச்சுவார்த்தை அரங்கில் ஒரு மூன்றாம் தரப்பாக உருவாகிவரும் நிலைமைகளே அதிகம் வளர்ச்சி பெற்று வந்துள்ளன.

இது கொழும்பில் கட்டளைப்பீடம் இரண்டாகப் பிளந்து கிடப்பதால் மேலெழுந்து வரும் ஒரு போக்காகும்.

படைத்துறை அதிகாரங்களைப் பொறுத்தவரை இப்பொழுது கொழும்பில் இரண்டு கட்டளைப் பீடங்கள் உண்டு.

ஒன்று - யுத்த நிறுத்தத்தை வைத்து அரசியல் நடத்தும் ரணில் தலைமையிலானது. இதனிடம் தான் பாதுகாப்பு அமைச்சு உள்ளது.

மற்றது - யுத்த நிறுத்தத்தைக் குழப்பி அரசியல் செய்ய முயற்சிக்கும் சந்திரிகா தலைமையிலானது. நிறைவேற்று அதிகாரங்களோடு முப்படைகளின் தலைமைத் தளபதியாக சந்திரிகா காணப்படுகிறார்.

இந்த இரண்டு கட்டளைப்பீடங்களுக்கும் இடையிலான கயிறிழுத்தற் போட்டியில் சிறிலங்காவின் படைத்துறை சிக்கியுள்ளது.

ஈழப்போர் வரலாற்றில் சிறிலங்காவின் முப்படைகளும் இப்படி இரண்டு கட்டளைப்பீடங்களுக்கிடையில் இழுபடுவது என்பது முன்னெப்பொழுதும் காணப்பட்டிராத ஒன்று.

இரண்டு கட்டளைப் பீடங்களில் எதற்கு விசுவாசமாக இருந்தால் தமது பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்ற விசுவாசப் போட்டியில் தளபதிகள் சமாதானத்தைப் பலியிடவும் தயாராகக் காணப்படுகிறார்கள்.

தனக்கு விசுவாசமான ஒரு அணியை தொடர்ந்து பேணுவதற்காக சந்திரிகா வழமைக்கு மாறாக தளபதிகளின் சேவைக் காலத்தை நீடித்து வருகிறார்.

இப்படி மிகவும் அசாதாரணமாக சேவை நீடிப்புத் தரப்பட்ட கடற்படைத்தளபதி தனது விசுவாசத்தை நிரூபிக்கும் பொருட்டாக கடந்த ஆண்டு முழுவதும் சமாதானத்தைப் பல தடவைகள் சோதனைக்குள்ளாக்கியதை இங்கே சுட்டிக்காட்டலாம்.

இப்பொழுது கொழும்பில் படைத்துறைத் தலைமை எனப்படுவது வலிந்து சேவை நீடிப்புத் தரப்பட்ட, ஓய்வு பெறும் வயதில் உள்ள தளபதிகளாலும், இவர்களுடைய சேவை நீடிப்பால் பதவி உயர்வின்றி ஓய்வு பெறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு நிராசையோடிருக்கும் இரண்டாம் நிலைத் தளபதிகளாலும் நிரப்பப்பட்டிருக்கிறது.

யுத்தகாலமென்றால் கட்டளைப்பீடம் இவ்விதம் இரண்டுபட்டுக்கிடப்பது படைத்தரப்பின் போர்த்திறனை பாரதூரமாகப் பாதிக்கும்



ஆனால் சமாதான காலத்திலோ இது தளபதிகளை அரசியல்வாதிகள் போலாக்கி விட்டிருக்கிறது.

தமது விசுவாசத்தை நிரூபிக்கும் பொருட்டாக தளபதிகள் சமாதானத்தைப் பணையம் வைக்கும் ஒரு எல்லைவரை போக முடியும்.

இத்தகைய ஒரு பகைப் புலத்திலேயே ராணுவம் பேச்சுவார்த்தை மேசையில் ஒரு மூன்றாம் தரப்பாக உருவாக முடிகிறது. அரசியல் தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய விவகாரங்களில் எல்லாம் ராணுவமே தீர்மானம் எடுக்கும் ஒரு ஆபத்தான வளர்ச்சி ஏற்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய சர்ச்சை இதைத்தான் காட்டுகிறது.

கட்டளைப்பீடம் இரண்டாகப் பிளந்து கிடக்கும் வரை அதாவது அடுத்த சனாதிபதித் தேர்தல் வரை அல்லது ரணிலின் அரசாங்கத்தை ஏதாவது ஒரு காரணம் கூறி சந்திரிகா கலைக்கும் வரை நிலைமை இப்படியே தானிருக்கும்.

இது ராணுவம் யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லாத ஒரு வளர்ச்சியைப் பெறுவதில் கொண்டு போய்விடும்.

அல்லது, அது தனது யுத்தநிறுத்த மீறல்களுக்கு ஏதாவது ஒரு கட்டளைப்பீடத்தின் மீது பழியைப் போடும் அல்லது ஏதாவது ஒரு கட்டளைப்பீடத்தின் மறைவில் நின்று கொண்டு நியாயம் கூறும்.


இது சமாதானத்தை எந்த வேளையும் சோதனைக்குள்ளாக்கக் கூடியது.

யுத்தநிறுத்தத்தை மீறுவதற்குரிய உணர்ச்சிப் புள்ளிகளை எப்பொழுதும் திறந்து வைத்திருப்பது.

இந்நிலையில் - கையாலாகாத ஒரு சாட்சிபோலிருக்கும் கண்காணிப்புக்குழு எதுவரை போக முடியும்?


மெலிந்து கொண்டே போகும் சமாதானம் எதுவரை நின்று பிடிக்கும்? ■

# பிறெட்றிக்கா ஜான்ஸ்சுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்...




**அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஜான்ஸ் அவர்களுக்கு!**

இவ்வளவு நாளாக நீங்கள் தென்னிலங்கையில் இடம் பெறும் படைத்துறை ஊழல்கள், கழுத்தறுப்புகள் முதலியவற்றில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தவிதத்தை பார்க்கும் போது Investigative Jernalism துறைக்கான பரிசு உங்களுக்கு கிடைக்கலாம் அல்லது வெகு சீக்கிரமே உங்களை படைத்தவரை சந்திக்கப் போகலாம் என்று சத்தியமாக எதிர்பார்த்தேன். என்னை ஏமாற்றி விட்டு திடீரென கிழக்கின் குழந்தை போர் வீரர்கள் என்று சொல்லப் படுபவர்கள் மீது கவனம்



செலுத்த ஆரம்பித்திருப்பதை வைத்துப் பார்க்கும் போது உங்கள் மேலாளர் மாறியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

கிழக்கின் ஆட்சேர்ப்புப் பற்றி படைத்துறைப் புலனாய்வு துறையினர் வழங்கியிருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றும் (Mug shots) புகைப் படங்களுடன் இரண்டு பக்கங்கள் நிறைய 2/2/2003 சண்டே லீடரில் எழுதியிருக்கிறீர்கள். நல்லது.

நாகர்கோவிலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கட்டாயம் கேள்விப் பட்டிருப்பீர்கள். இராணுவ காப்பரண் வரிசையின் ஒரு முனை அங்குதான் இருக்கிறது. அங்கே பாடசாலை என்ற ஒன்று இருக்கிறது உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத் தெரிந்திருக்காது. அங்கே 36 பாடசாலை சிறுவர்கள் இலக்குவைத்து வீசப்பட்ட கிபிர் குண்டுகளால் துடிக்கத்துடிக்கக் கொல்லப்பட்டார்கள். சத்தியமாய் இதுவும் உங்களுக்குத் தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் உயிர்வாழ இந்த 36 குழந்தைகளுக்குள்ள உரிமை பற்றி நீங்கள் எழுதியிருப்பீர்கள்.

நவாலியில் 160 பேரின் உயிர் வாழும் உரிமைகள் பறிக்கப் பட்டதைப்பற்றி எழுதியிருப்பீர்கள். நீங்கள் எழுதவில்லை.

மடுத்தேவாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் மீது குறி வைத்து இராணுவத்தால் வீசப்பட்ட குண்டுகளால் தன் பிள்ளைகள் நால்வரை ஒரேயடியாக பறிகொடுத்து விட்டு கதறிய தாயை உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உங்களைப் பொறுத்தவரை தமிழர்கள் எல்லோருமே மனித உரிமைகளுக்கு லாயக்கற்ற அற்ப பிறவிகள். ஆகவே இந்த தாயின் அவலத்துக்கு காரணமான மனித உரிமை மீறல் பற்றி நீங்கள் எழுத நிணைக்கவில்லை.







செம்மணி என்று யாழ் நகரின் நுழைவாயிலில் இருக்கிறதே தெரியுமா? எங்கோ கேட்ட பெயர் மாதிரி இருக்கிறதா? இங்குதான் றிவிரச i,ii,iiiக்கு பின் காணாமல் போன 800க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் உயிரோடும் உயிரற்ற நிலையிலும் இராணுவ உயர் அதிகாரிகளால் அனுப்பப்பட்டு புதைக்கப்பட்டதாக கோப்பரல் ராஜபக்ஷ சாட்சியமளித்துள்ளார். இதற்கு பொறுப்பானவரென சர்வதேச மனித உரிமை அமைப்பினால் தீர்ப்பிடப்பட்டிருக்கும் தளபதி ஜானக பெரேரா அவுஸ்திரேலியாவில் தூதுவராக்கப்பட்டிருக்கிறாரே தெரியுமா? இந்த 800 பேரில் குறைந்தது ஒரே ஒருவரின் மனித உரிமைகளைப் பற்றியாவது நீங்கள் மூச்சு வீட்டிருக்கிறீர்களா? அவர்களது உறவினர்கள் உணர்வுரீதியாக கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சரி மேலேயுள்ள படத்தைப் பாருங்கள், இதை நாங்கள் வரையவில்லை. இப்பால் அத்தாசுக்கென வசந்த சிறிவர்த்தன வரைந்த கணினி ஓவியம். 2/2/2003 சண்டே ரைம்ஸ்சில் வந்துள்ளது. உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 800 சதுர கிலோ மீற்றர்களை இராணுவம் முக்கிய வீதிச் சந்திப்புக்களில் குந்தியிருந்து ஆக்கிரமித்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரவிடாமல், சுயாதீனமாக நகரவிடாமல் ஒரு மாபெரும் மனித உரிமை மீறல் செய்து கொண்டிருக்கிறதே. அந்த மக்களின் ஒருவரது மனித உரிமைபற்றியாவது உங்களுக்கு அக்கறையிருக்கிறதா?

உங்களுக்கு ஒரு பகிரங்க இரகசியத்தைச் சொல்ல வேண்டும். அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயக்க உறுப்பினர்கள் அரசியல் வேலை செய்கிறார்கள். அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். சுயவிருப்பின் பேரில் சேர்ந்தவர்களது வீட்டில் நீங்கள் போய்க்கேட்டாலும். தங்கள் பிள்ளை "கடத்தப் பட்ட"தாகத்தான் சொல்லுவார்கள். ஏனென்றால் சுயவிருப்பில் சேர்ந்ததாக சொன்னால், ஆயுதப் படைகளிடமிருந்து அவர்கள் தப்ப முடியாது, இதை அமெரிக்காவில் இருந்து வந்த வண. மில்லர் தெரிவிக்கவில்லை. அவருக்கு இப்போது தாய்நாட்டு நலன்கள் கண்ணை மறைத்திருக்கும்.

கடத்தப்படும் சிறுவர்களை மீண்டும் காண்பது அரிதென்று வண.மில்லர் கூறியிருக்கிறார். அண்மையில் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் இயக்கத்தில் இருக்கும் தங்கள் பிள்ளைகளை சந்தித்து மகிழ்ந்திருப்பது அவர் உங்களுக்கு தந்த தகவல் ஒரு பக்கசார்பானது என்பதை காட்டுகிறதல்லவா? புலிகளிடமிருந்து தப்பி படையினரிடம் சரணடையும் சிலர் பாதுகாப்புக்காரணங்களுக்காக கஸ்கொடவிலவில் உள்ள அனாதரவான பெண்கள் இல்லத்துக்கு அனுப்பப்படுவதாக கூறியுள்ளீர்கள். பிந்துனுவேவ முகாம், வெலிக்கடை முகாம் படுகொலைகளுக்கு பின்னும் புலிகளிடம் இருப்பதை விட கஸ்கொடவில முகாமில் இருப்பது சிறப்பானது என்று நீங்கள் கருதினால் உங்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதைத் தவிர வேறு எதுவும் என்னால் முடியவில்லை. கஸ்கொடவில முகாமும் துஷ்பிரயோகங்களுக்கு பெயர் பெற்றது தான் என்று கூறுகிறார்கள் கடத்தப்பட்டவர்கள் தொகை குறித்து ஒவ்வொருவரும் குழப்பமான எண்ணிக்கைகளை தருகிறார்கள் என்று கூறியிருக்கிறீர்கள். இவர்களை நம்பி புலிகள் மீது கடத்தல் குற்றங்களை அடுக்கியிருப்பது உங்களுக்கே ஒரு மாதிரியாக இல்லையா?



உங்கள் கட்டுரையின் ஒருபகுதியாக தலைமையக பொலிஸ் பரீட்சகர் ஹறிஸ் சந்திர பண்டார, "புலிகள் ஆட்சி முறைமை பற்றி அறிய மாட்டார்கள். எந்த சிங்கள் அதிகாரியும் புலிகளின் கீழ் வேலை செய்யமாட்டார்கள்." என்று திமிரோடு குறிப்பிட்டதை பெட்டிகட்டிச் சேர்த்திருக்கிறீர்கள். உண்மைதான் ஏற்கனவே நிர்வாகசேவை ஒன்றை நடத்திவரும் புலிகளுக்கு ஹறிஸ் சந்திர பண்டாரதான் வந்து அதனை சொல்லிக் கொடுக்க வேண்டும்! போல் ஹறிஸ் வேறு அபிப்பிராயம் கொண்டிருந்தார் முழு நாட்டுக்கும் புலிகளின் காவல் துறையைப் பயன்படுத்தலாம் என்றும் தென்னிலங்கையின் ஊழலின் அளவினால் பொலிசில் இருக்கும் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்ற போதுமான மின்கம்பங்கள் அவர்களுக்கு கிட்டாதென்று நினைக்கிறேன் என்று அவர் எழுதியிருந்தார். (அவரது Three Hearty Cheers for Tamileelam police ) என்ற கட்டுரை அப்படியொரு பொலிஸ் படை உறுப்பினர் ஒருவரை உங்களுக்கு உதவிக்கு அழைத்துள்ளீர்கள்.... வருத்தமாக இருக்கிறது. உங்களுக்கு போனஸாக கீழெ ஒரு படம் இருக்கின்றது. ஆமாம் உங்கள் பொலிசார் சட்டம், ஒழுங்கு மனித உரிமையை பேணும் அழகுதான் அது. நன்றாக பார்த்துக்கொள்ளுங்கள்.

அண்மையில் சனாதிபதியின் உத்தரவின் பேரில் சிறுவர்கள் கடத்தல் குறித்து ஆராய்ந்த 5பொலிஸ் குழுக்கள் கடத்தப் பட்டதாக கூறப்படும் 137பேரில் 130பேர் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதாக அறிக்கை தந்துள்ளன(26.2.2003 சிறிலங்கா ஒலிபரப்பு கூட்டுத்தாபன காலைச் செய்தி) என்பது உங்களுக்கு ஏமாற்றமளிப்பதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அமைச்சர் மிலிந்த மொறகொட கட்டாய இராணுவ சேவை பற்றி அதிகமாக கதைத்து வருகிறார். அவரிடம் போய் மனித உரிமைகள் பற்றிய உங்கள் கவலைகளை அவிழ்த்து விடுங்கள்.



இது அனலெரிந்த தேசம். 17000க்கு மேற்பட்ட போராளிகளையும் 70,000க்கு மேற்பட்ட மக்களையும் பேரினவாத பூதங்களுக்கு காவுகொடுத்த இனம் நாங்கள். எங்கள் விடயங்களை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். தயவு செய்து... தயவு செய்து எங்களை எங்கள் பாட்டில் விட்டு விடுங்கள். அல்லது "In war and love anything is fair" என்போமா? மீண்டும் சந்திப்போம்.

**அன்புடன்**
**வின்சென்ற் புளோறன்ஸ்**

# நறுக்கென...



## கதிர்காமரின் ஜே.வி.பி. புராணம்

**கதிர்காமர்** மீண்டும் கதைக்கத் தொடங்கியிருக்கிறார், கண்டபடி கிட்டத்தட்ட அறளைக் கதைபோல், இயலாமையின் வெளிப்பாடாகவே அக்கதைகள் வெளிவரத் தொடங்கியுள்ளது எனலாம்.

சந்திரிகாவுக்கு ஆலோசகராகப் பொறுப்பேற்றிருந்தவர் இப்போது சந்திரிகாவின் ஆலோசனைகளைக் கேட்டு அவரது அபிலாசைகளை நிறைவேற்ற அவரைத் திருப்திப்படுத்த அலம்புவதாகவே தெரிகிறது.

அண்மைக்காலமாக அவரது அரசியல் கருத்துக்களை அவதானிப்பவர்கள் பலரும் இதனை உணர்ந்து கொள்ள முடியும்.

சமாதான நகர்வுகள் சந்திரிகாவினதும் கதிர்காமரினதும் கணிப்புக்களை பொய்யாக்கி எதிர்பார்ப்புக்களுக்கு ஏமாற்றம் கொண்டு தொடர்ந்தும் முன்னேறுவதென்பது இருவராலும் தாங்கிக் கொள்ள முடியாத விடயமே.

சமாதான நடவடிக்கைகளுள் இருதரப்பினரும் திகைக்கும் வண்ணம் வெளிநாடுகளின் தலையீடுகளும், அதற்கு அந் நாடுகள் வழங்கும், ஆதரவும் வழங்கவரும் நிதியுதவிகளும், சிலவேளைகளில் மறைமுகமாகவேனும் பொ.ஐ.முன்னணியினர் மீது கொடுக்கும் அழுத்தங்களும், சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்தைக் கூட உடனடியாக பயன்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அந்தரிப்பில் இரண்டுபேருமே ஆளுக்கு ஆள் ஆரார் அகப்படுகினமோ அவர்களையெல்லாம் விமர்சிப்பதும், கண்டிப்பதும், சீறுவதும், சினப்பதும், பின்னர் அவர்களிடம் மன்னிப்பு கேட்கும் முறையில் அடங்கிப்போய் சமாளிப்பதுமாக உள்ளனர்.

'இலங்கையின் மீது கொண்டுள்ள அன்பு காரணமாக நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபடவில்லை, உலக அரங்கில் முக்கிய பங்குவகிப்பதாக தன்னைக் காட்டிக் கொள்வதற்காகவே ஈடுபடுகிறது, என்று கதிர்காமர் நோர்வேயை சீண்டியுள்ள அதேவேளை இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்றும் தாளம் போடுகிறார். ஜப்பானை நேரடியாகத் தாக்கும் வக்கின்றி மறைமுகமாக கண்டிக்க முயல்கிறார்.

ஒரு காலத்தைய வெளிநாட்டு அமைச்சருக்கு வெளிநாடென்றாலே இப்போது சினமாகவும், சீற்றமாகவும் இருக்கிறது.

இப்போது உள்நாட்டு ஜே.வி.பி.யினர் அவருக்கு உத்தமமான சத்தியவான்களாகத் தெரிகின்றனர்...

'ஜே.வி.பி வேகமாக வளர்ந்து வரும் கட்சியாம்... பிரதானமான இளைஞர் சக்தியை அது கொண்டிருக்கிறதாம். ஜே.வி.பி. கொள்கை பிறழாத ஊழலற்ற கட்சியாம், பாராளுமன்றத்தில் உள்ளேயும் வெளியேயும் அக்கட்சியின் நடத்தைகள் முன்னுதாரணமானவையாம்' - எப்படி லக்ஷ்மன் கதிர்காமரின் கண்டுபிடிப்பு. விமல் வீரவன்ச - டில்வின் சில்வா ஆகியோர் தலைவிறைத்தே சாகுமளவிற்கு ஐஸ் மலையையே தூக்கிவைத்துள்ளார் ஐயா,


ஒரு வேளை சந்திரிகா சொல்லிக் கொடுத்ததை ஒப்புவித்துள்ளாரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. பாவம் விஜயகுமாரணதுங்க...

தன்னைக் கொன்றவர்களுக்கு இவ்வளவு கௌரவத்தையும் புகழ்மாலையையும் தனது மனைவியும், அவரது ஆலோசகரும் வழங்கியுள்ளமை குறித்து அவரது ஆத்மா என்ன நினைக்கும்.

தனது ஆட்சிக்கெதிராக கிளர்ச்சி செய்த ஒருகாலத்தைய பயங்கரவாதிகளின் சுட்டுவிரல் அசைவுக்கு ஏற்ப ஆடும் தனது மகள் சந்திரிகாவைப்பற்றி அவரது தாயாரான சிறிமாவின் ஆத்மா என்ன நினைக்கும்....

சந்திரிகாவுக்கும் கதிர்காமருக்கும் அவர்களை நினைவில் இருக்குமா? அரசியல் - அதுவும் பேரினவாத சனநாயக அரசியலில் எல்லாவற்றையும் மறந்து விட வேண்டும் என்பது ஒரு கோட்பாடாகவும் இருக்கலாம் தானே...!

## பேய்...பிசாசுகள் - சாத்தான்களுடன் இணையத்துயாராகும் பொ.ஐ. முன்னணி



**எண்பதுகளின்** இறுதிப் பகுதியில் கொழும்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா தமிழீழ விடுதலைப்போராட்டத்தை ஒடுக்கவும், தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்கவும் இஸ்ரேலிய உளவு நிறுவனமான 'மொஸாட்' உதவியையும் பயிற்சிகள் மற்றும் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக முதன் முதலாக சிறிலங்காவிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவொன்றையும் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் ஆரம்பிக்க அனுமதித்தார்.

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாகக் கூறிக் கொண்டு இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை ஆரம்பிக்க இடம் அளிப்பது முரணானதாக இல்லையா என்று அவரிடம் கேட்டபோது.

'பயங்கர வாதத்தை அழிக்க சாத்தானுடனும் கூட்டுச் சேரத் தயார்' என்று தயக்கமின்றி ஜே.ஆர் கூறியதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். கிட்டத்தட்ட சாத்தான்களாகத்தான் இஸ்ரேலியர்களை ஜே.ஆர். கருதியிருக்கிறார் என்பது அன்றைய நிலையில் இஸ்ரேலியர் உணர்ந்திருக்காவிட்டாலும் நாங்கள் உணர்ந்து தான் இருந்தோம்..

பின்னர் பிரேமதாசாவும் இதேபோன்றதோர் கருத்தை முன்வைத்து பயங்கரவாதிகளை ஒழிக்க வேறு பயங்கரவாதிகளின் துணையை நாட வேண்டுமானால் நாடத்தயார் என்றார்.. அது பேயாக இருந்தாலும் சரிதான் என்றார்.

இப்போது விடுதலைப் புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்க சமாதானப் பேச்சுவார்த்தையை தொடரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக்கவிழ்ப்பதற்கு பேய்பிசாசுகளுடனும் இணைய பொது சன ஐக்கிய முன்னணி தயார் என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

அவர் வேறு யாருமல்ல. பொதுசனஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜானக பண்டாரதென்னக்கூன் தான்... அதுமட்டுமல்ல இதற்காக... அதாவது ஐ.தே.முன்னணி ஆட்சியைக் கலைக்குமாறு சனாதிபதியைக் கோருவதற்கு 10 லட்சம் பேரைக் கொண்ட மிகப் பெரிய ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தப் போவதாகவும் இத்துடன் ஐந்து லட்சம் ஜே.வி.பியினரையும் இந்தப் பேரணியில் இணைத்துக் கொள்ளப் போவதாகவும் கூடக் கூறியுள்ளார்.

ஆக ஐந்து லட்சம் பேய் பிசாசுகளுடன் தங்கள் பேரணியை இணைத்துக் கொள்ளப் போவதைத் தான் தென்னக்கூன் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார் போலும். எப்படியோ சிறிலங்காவின் ஆளுங்கட்சியோ எதிர்க்கட்சியோ எதுவானாலும் தங்களின் அரசியல் இலக்குகளை எட்ட யாரை இணைத்துக் கொள்கிறார்களோ அல்லது யாருடன் இணைந்து கொள்கிறார்களோ அவர்களை சாத்தான்களாகவோ, பேய்களாகவோ, பிசாசுகளாகவோ தான் நினைக்கின்றார்கள் போலும். சம்பந்தப்பட்டவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்களோ.. அல்லது தாங்கள் அப்படித்தான் என நினைத்து பேசாமலே இருப்பார்களோ... பேய்பிசாசுகளுக்கே வெளிச்சம்.

**செங்குட்டுவன்**

**போர்** ஓய்வின் வயது ஒரு வயதை எட்டியபோதும் இன்னமும் போர்க்கால கெடுபிடிகள் எந்த முடிவினையும் எட்டவில்லை என்பதே உண்மை.

போரை ஓய்வுக்கு கொண்டு வருவதன் மூலம், சமாதானத்தை விழிப்பு நிலைக்கு கொண்டு வருவதாகவே அரசு காட்டிக் கொள்ள முயல்கின்றது.

ஆனால் இன்றைய நிலையில் அரசு போர் ஓய்வு நிலையென்ற எவ்வாறு அரசு செயற்பட்டதோ அதே போன்று சமாதான பேச்சுவார்த்தைகளின் அறுவடைகளை தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடகிழக்கு பிரதேசத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு என தொடங்கப்படவுள்ள நிலையில் அவற்றில் பாதிப்பு ஏற்படும் வகையில் அரசின் நடவடிக்கைகள் உள்ளன.


அதாவது அண்மையில் வெளியான ஒரு தகவலின்படி அரசு வடகிழக்குப் பிரதேசத்தில் இடம் பெறவுள்ள அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிற்கான திரவப்பணத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விடுவித்து



## சமாதானக் கால கெடுபிடிக்குள் சிக்கித்திணறும் திரவப்பணம்

வருவதாக தெரியவருகின்றது.

மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் அரசிற்கு வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையில் இது செயற்படுத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது.



இதே நடைமுறையைத் தான் அரசு - புலிகளுக்கிடையில் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் மேற்கொண்டது என்பது கவனிக்கத்தக்கது.

அன்று அரசு இந் நடவடிக்கையினையும் ஒரு யுத்த தந்திரோபாயமாகவே கைக் கொண்டது. இன்று சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்

**சிறி. இந்திரகுமார்**

மாயவலை மூலம் போர்க்கால கெடுபிடி சமாச்சாரங்களை அரசு விழிப்பு நிலையில் வைத்திருப்பதையே நடைமுறை யதார்த்தங்கள் உணர்த்துகின்றது.

இந்த உண்மை நிலைகளை உணர்ந்து கொள்ளாத பேதைகளைப் போன்றே அரசு தமிழ் மக்களை நோக்குகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தமிழ்மக்களின் பிரச்சினையில் இருவேறு முகங்களையே தற்போது கொண்டுள்ளது போலத் தோன்றுகின்றது.

ஒன்று தென்னிலங்கை வாழ் சிங்களவர்கள் மத்தியில் தமிழ் மக்களிற்கு எதனையும் விட்டுக் கொடுத்ததாக அல்லது எதையும் வழங்கி விடவில்லையென்பது போல நடந்து கொள்ளுகின்ற அதேவேளை.

தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேசபார்வையாளர்கள் மத்தியிலும் முற்போக்காக தாங்கள் ஏதோ ஒன்றை வழங்கி விடத்தயாராக இருப்பது போலவும் காட்டிக் கொள்ளுகின்றது.

ஆனால் அரசு தனது எதிர்கால வாக்கு வேட்டையினை குறிவைத்து தென்னிலங்கைவாழ் சிங்களவர்கள் மத்தியில் அப்படி நடந்து கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு இருக்கலாம்.

ஆனால் இலங்கையில் எதிர்கால அமைதி நிலைக்கு தமிழ் மக்கள் மத்தியில் அவர்களின் நியாயமான கோரிக்கைகளின் விடயத்தில் அரசு நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

ஆனால் இலங்கையில் ஆட்சி பீடம் ஏறுகின்ற பிரதான இரண்டு கட்சிகளும் தமது பிரதான வாக்கு வங்கிகளை தென்னிலங்கையிலேயே வைத்திருப்பதாலும் என்றுமே தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்காதவர்கள் தற்போதும் மதிப்பளிப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

இங்கே ஏன் இதைப் பற்றி இப்போது பிரஸ்தாபிக்கப்படுறது என்றால் அரசு புலிகளோடு கடுமையான யுத்தம் செய்து கொண்டிருந்த காலப்பகுதியில் தமிழ் மக்களை கடுமையான நெருக்குவாரங்களிற்குள் தள்ளிவிடுவதற்காக கடைப்பிடித்த சில நடைமுறைகளைப் போன்றுள்ளது.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொருளாதார தடை விதிப்பினை மேற்கொண்டும் மக்களின் அடிப்படை உரிமைகளோடு சம்மந்தப்பட்ட விடயங்களை தடை செய்தும் வேளையிலும் மேற்கொள்கின்றது என்றால் தமிழ் மக்கள் இதனை சமாதானக்கால போரியல் நடவடிக்கையாகவே கருதுகின்றனர்.

அடிப்படை கட்டுமானங்கள் யாவும் சிதைந்து போயுள்ள நிலையில் அவை எவ்வளவு வேகமாக மீள் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றதோ அதே அளவு வேகமாகவே சமாதானத்தின் மீதும் மக்களிற்கு நம்பிக்கை ஏற்படும்.

வட கிழக்கு பிரதேசங்களை நோக்கி பன்னாட்டு தொண்டர் நிறுவனங்களாலும் உலக நாடுகளாலும் அபிவிருத்திப் புனர்வாழ்வு நடவடிக்கைகளிற்காக திறந்து விடப்படும் நிதியினை திரவப்பண வடிவில் விடிவிப்பது மட்டுப்படுத்துவதானது அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாதிப்பினை ஏற்படுத்தவே செய்யும்.

அத்தோடு துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்யும்.

இது அரசிற்கு தெரியாத விடயமல்ல. அரசு இதனை தெரிந்து கொண்டே மேற்கொள்கின்றது என்பதிலிருந்து அரசு சமாதானத்தின் மீது காட்டும் நம்பிக்கையிலும் விசுவாசத்திலும் நம்பிக்கையீனங்களையே தோற்றுவிக்கும்.

பெருமளவு நிதிப்பாச்சல்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இன்று திறந்து விடப்பட வேண்டியிருக்கின்ற நிலையில் அரசு நிதியினை திரவப்பண வடிவில் விடுவிப்பதில் மட்டுப்படுத்தப்பட்ட நடை முறையினை பின்பற்றுவது சமாதான காலத்தை கடந்த காலங்கள் போன்று இப்போதும் இழுத்தடிக்க விரும்புவது போன்றே இருக்கும்.

இவ்வாறான நடை முறை விடயங்களை சாதாரண சிக்கல்களாக நோக்கி புறந்தள்ளுவதாக இருப்பின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளும் புறந்தள்ளப்பட்ட விடயங்களாகவே இருக்கும். இது நிரந்தர சமாதானத்தையும் இழுத்தடிக்கவே செய்யும்.

அரசு யுத்த கெடுபிடிகளை சமாதான காலத்திலும் ஏற்படுத்தாது சமாதான காலத்தில் காணப்படும் யுத்த கால கெடுபிடிகளை நீக்க ஆவண செய்வதே எதிர்கால சமாதானத்தைப் பலப்படுத்தச் செய்யும்.

# தமிழ் மக்களின் சுயாதிபத்தியத்தை சிறிலங்கா அரசு ஏற்பதே ஒரேவழி

யுத்தம தவிர்ப்பு ஒப்பந்தத்தின் வயது இப்போது ஒரு வருடமாகிவிட்டது. ஒப்பந்தத்தின் முக்கியமான அடிப்படையான வடகிழக்கு மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புதல் என்பதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக எழுந்து அலைபோல் ஓங்கி அடித்து ஓய்ந்து விட்டது. வெள்ளைப் பேப்பர்களின் கறுப்புக் கோடுகளிற்கும், இலத்திரனியல் ஊடகங்களின் வண்ண ஒளிபரப்புக்களுக்கும் அப்பால் எதுவுமே இல்லை என மக்கள் முணு முணுக்கத் தொடங்கி விட்டனர்.

இப்போது சமஷ்டி அமைப்புக்குள் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வாயப்புக்கள் ஆராய்வதெற்கென 'மொடல்' பார்த்து வரக்கிளம்பிய குழுவும் திரும்பி விட்டது. மொடல்களுக்கு முன்னாக கணக்கில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களை ஆராய்வது எப்படி, எப்போது என்ற கேள்விகளும் இருக்கின்றன.

சமஷ்டி என்பது பல்தேசிய பல்கலாச்சாரத்தன்மையை ஏற்றுக்கொண்டு சிறுபான்மை மக்களின் பாதுகாப்பையும்,கௌரவத்தையும் சமமாக நோக்கும் தன்மை கொண்ட ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய விடமாகும். இங்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்யவை தேசிய இனங்களின் சுயாதிபத்தியம் (Autonomy) அங்கீகரிக்கப்பட்டதன் பின்பே சமத்துவமான இணைவும் அதிகாரப் பகிர்வும் ஏற்படுத்தப்படவேண்டும். இவற்றான ஒரு அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின் சுயாதீனமான ஒரு நீதி பரிபாலனத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுபான்மை இனங்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் வழங்காத, அரசின் முக்கியமான பணி பௌத்த சாசனத்தை வளர்த்து பாதுகாப்பதாகும் எனக் கூறும், இலங்கை ஒற்றை ஆட்சிநாடு எனக் கூறும், சிறிலங்கா சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பை மாற்றுதல் என்பதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவும் சர்வசனவாக்கெடுப்பின் ஆதரவும் கிட்டுமா என்பதே எப்போதோ தொடக்கம் கேட்கப்படுகின்ற கேள்வியாகும்.

இன்று இனவாதத்தின் தலைமைத்தூணாக விளங்கும் ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச இப்படிக் கூறுகிறார். " இலங்கையில் சமஷ்டி ஆட்சி அமுலுக்கு வந்தால் ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப்பகிர்வு என்ற எமது விருப்பம் ஒருபோதும் நிறைவேறாது" ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப்பகிர்வு எனும் பேச்சு தமிழ் மக்களின் காதுகளை எப்போதோ புளிக்க வைத்த விடயமாகும். இப்போது சிலர் "மாகாண சபை"யை எப்போதோ பெற்று பிரச்சினையை அப்போதே முடித்திருக்கலாம் என கூறுகின்றனர். மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் துறைகளும் சமஷ்டி அதிகாரங்களுடன் ஏன் இந்திய மாநில அதிகாரங்களுடன் கூட ஒப்பிட்டுப்பார்க்கும் போது மிகவும் மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்தது. அதிலும் சில துறைகளில் மாகாண அரசுக்கு செயற்படக்கூடிய கணிசமான அதிகாரம் வழங்கப்பட்டது போல் பார்வைக்குக் காட்டப்பட்டாலும் பின்னிணைப்புக்கள் மூலம் அவ்வதிகாரங்கள் பறிக்கப்பட்டன. உதாரணத்துக்கு காணிபற்றிய விடயம் மாகாணத்துக்குரிய பட்டியலில் போடப்பட்டு மாகாண அரசுக்குரிய விடயம் எனக்காட்டப்பட்டு பின்னர் பின்னிணைப்பு மூலம் காணி பற்றிய முழு அதிகாரமும் சனாதிபதியின் கைகளில் உள்ளதாக ஆக்கப்பட்டது. முன்கதவால் கொடுக்கப்பட்டுபின் கதவால் திருடிக்கொள்கிற கதையாக இது இருந்தது. நிதி ஒதுக்கீடுகளைப் பொறுத்த வரையிலும் தென்பகுதி மாகாண சபைகளே இப்போது நிதிவள ஒதுக்கீட்டில் தமக்குரிய இடமளிக்கப்படவில்லை என கூக்குரலிடுகின்றன.

இது ஒருபுறமிருக்க, எஸ்.ஜே.வி செல்வநாயகத்திற்கு முன்பே ஒரு படித்த சிங்கள இளைஞன் 1926ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறும்போது இலங்கையை ஒரு சமஷ்டிக் குடியரசாக்க வேண்டுமென்று கூறியுள்ளார். அவர் வேறு யாருமல்ல. எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவேதான். (இவர் இனவாதப் பிடிக்குள் சிக்கி 1954இல் தனிச்

> **தற்போது பேரினவாதிகளான இராணுவ ஜெனரல்களும் சமாதான முயற்சிகளை பேச்சுவார்த்தை மேசைகளில் இருந்து யுத்த அரங்கிற்குள் கொண்டு செல்ல முயல்கின்றனர் என்பதை அண்மைய உயர்பாதுகாப்புவலய விடயங்களின் கையாள்கை உறுதிப்படுத்துகிறது.**

சிங்களம் என்னும் நிலைப்பாட்டிற்குள் வந்துவிட்டார்) 1948இல் சுதந்திரம் பெறும் போதே சமஷ்டியை அமுல் படுத்தயிருந்தால் இன்றைய அழிவுகள் ஏதும் ஏற்பட்டிருக்காது என்கிறார் முன்னாள் வெளிநாட்டுத் தூதுவரும், அரசியல் ஆய்வாளருமான டி.டி. எஸ் .ஏ.திசாநாயக்க.

பேரினவாதிகள் குறிப்பிடுவதைப் போன்று ஐரோப்பா, அமெரிக்க நாடுகளின் புறத்தேவை நிலைமைகள் மட்டுமே (அவர்களுடைய பாதுகாப்புக் காரணங்கள்) சமஷ்டி அமைப்பின் உருவாக்கத்திற்கு காரணமாக அமையவில்லை. "வரலாற்றியல் கண்ணோட்டத்தில் நோக்கினால் 15ஆம், 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்துமுடிந்த மதப்போர்களும் சமஷ்டி அரசுகளின் உருவாக்கத்தில் முக்கிய பங்குவகித்திருப்பதைக் காணலாம்" என்கிறார். பெர்ப்ரே (B0b Rae) எனும் கனேடிய சட்டவியல் பேராசிரியர் 1929 இல் கியூபெக் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டதில் இருந்து 1867 இல் பிரித்தானியரால் கனேடிய சமஷ்டி அமைப்பு உருவாக்கப்படும் காலம் வரை பிரெஞ்சு கியூபெக்கியர்களால் நடாத்தப்பட்ட வீரம் செறிந்த இரத்தம் சிந்திய போராட்டங்களே கனேடிய சமஷ்டி அமைப்பின் அடிப் படையாகும் என்பதையும் இவர் குறிப்பிடுகிறார்.

கடந்த பல தசாப்தங்களாக சிறிலங்கா காவல்துறை , சிறிலங்கா நீதித்துறை என்பவற்றில் தமக்கு நீதி கிடைக்காது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொண்டதாலேயே அதற்கு நிகரான தமக்குரிய மாற்று அமைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. அண்மையில்

**அ.அன்ரன் அன்பழகன்-**

மட்டக்களப்பு மயிலந்தனை, பிந்துனுவெவ படுகொலை சம்பவங்களில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மற்றும் காவல்துறையினர் நீதி மன்றங்களால் விடுவிக்கப்பட்ட சம்பவங்கள் இவற்றிக்கு நல்ல உதாரணங்களாகும். புலிகளின் இராணுவக் கட்டமைப்பை மட்டுமல்ல, அவர்களுடைய நிர்வாகக் கட்டமைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இந்த சமாதான முன்னெடுப்புக்கு அவசியமாகும்.

தற்போது பேரினவாதிகளான இராணுவ ஜெனரல்களும சமாதான முயற்சிகளை பேச்சுவார்த்தை மேசைகளில் இருந்து யுத்த அரங்கிற்குள் கொண்டு செல்ல முயல்கின்றனர் என்பதை அண்மைய உயர்பாதுகாப்புவலய விட யங்களின் கையாள்கை உறு திப்படுத்துகிறது.

இதேபோன்று மட்டக்களப்பு வீரத்தின் விளைநிலம் வரவேற்கிறது பெயர்ப்பலகையும் இடுப்புப்பட்டியுடன் பெண் போராளிகளை உள்நுழையவிடாது வவுனியாவில் தடுத்தமை போன்றவற்றையும் குறிப்பிட முடியும்.

இலங்கைத்தீவில் ஒப்பந்தங்கள் செய்யப்படுவது முறித்துப் போடுவதற்காகவே என்பதாகிவிட்டது வரலாறு. மாறி மாறி வரும் அரசுகளின் ஒப்பந்தங்கள் எதிர்க் கட்சிகளினால் கிழித்தெறியப்படுகின்றன. இதுவே இத்தீவுத் தேசத்தின் இரத்தக் கறைகளை ஏற்படுத்தும் சூர்வாள்களாகி விட்டன. அது மட்டுமல்ல கடந்த காலங்களில் தீர்வுத்திட்டங்கள் சிங்கள அரசுகளால் அல்லது அவர்களுக்குத் துணையாக வந்தவர்களால் உருவாக்கப்பட்ட வரைபுகளை தமிழ் மக்கள் மீது திணிக்கும் முயற்சியாகவே இருந்து வந்தது.

1985 முதல் திம்பு தொடங்கி இன்றுவரை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வு மிகத் தெளிவாகவே முன்வைக்கப்படுகிறது. தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழ் மக்களுக்குரிய சுயநிர்ணயம் என்பவற்றில் எவ்விதமாற்றமும் இல்லை. இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுத்திட்டம் ஒன்றே தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்க முடியும்.

தீர்வுத்திட்டத்தின் மாதிரி எவ்வாறானதாக அமையவேண் டும் என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. அவை ஐரோப்பிய மாதிரியையோ அல்லது கனேடிய மாதிரியையோ கடந்து தமிழ் மக்களின் சுயாதிபத்தியத்தை (Automomy) ஏற்றுக்கொள்ளுதல் என்பதே இதன் வெற்றியை தீர்மானிக்கும் காரணியாகும். இதனடிப்படையிலேயே தமிழ் மக்கள் சிறிலங்கா அரசுடனான இணைவும், அதிகாரப் பகிர்வும் அமையக் கூடும். (Cordination and Shared Government) இதுவே சமஷ்டிக்குரிய பிரதான அடிப்படையாகும்.

தமிழ் மக்கள் அரசியல் அமைப்பினாலும், அதனைத் தொடர்ந்த நடைமுறையினாலும் அங்கீகரிக்கப்படும் போதே சிறிலங்கா சமஷ்டிக் குடியரசின் பிரஜைகள் என்பதைப் பிரதிபலிப்பார்கள்.

தமிழ் தேசியத்தின் சின்னமாகிய புலிக்கொடியும் , சிங்கள தேசியத்தின் வாளேந்திய சிங்கக்கொடியும் சமஅந்தஸ்தைப் பெறுகின்ற போது இலங்கை ஐக்கிய சமஷ்டிக் குடியரசுக்கு ஒரு புதிய தேசியக் கொடி உருவாக்கப்படல் தவிர்க்க முடியாததாகிவிடும்.



# நா காப்பின் யாரும் வாழலாம்

**பேச்சுத்தான** வாழ்க்கையின் உயிர்நாடி. பேசுகின்ற ஆற்றல் இருப்பதனால் தான் நாம் மனிதர்கள். பேச்சு வாழ்வின் மூச்சாக இருக்கின்றது.

நாம் பேசுகின்ற வார்த்தைகளில் எளிமை இருக்க வேண்டும். இதனை உணர்ந்து பேசினால் வெற்றியுடன் வாழ முடியும். இறைவன் எமக்கு நாவைக் கொடுத்திருக்கிறான். இதனால் உண்டாகும் பயன்கள் எண்ணற்றவை. எமது உள்ளத்துக் கருத்துக்களை படம் பிடித்துக் காட்டுவது இது. இது உலகை விளக்கும். கற்பனையில் கண்டவற்றைக் கண்ணாடி காட்டுவது போல் தெளிவாக விளக்கும். எமது உடலில் உள்ள எல்லா உறுப்புக்களுக்கும் இந்த இயல்பு இருக்காது.

ஆனால், நாக்கு மற்றைய உறுப்புக்களுக்கு உணர்த்தக்கூடிய ஆற்றலையும், மனதில் பதியப் பேசும் சக்தியையும் கொண்டது. கண்ணில்லாதவர்களுக்கு கடலைப் 'பற்றியும், நிலவைப்பற்றியும் விளக்கிக் கூறும். செவிடர் உள்ளத்தில் கீதத்தின் இனிமையையும் ஆழமாகப் பதிந்து விடச் செய்யும் திறமை கொண்டது.

நாக்கு இல்லை யென்றால் குருடருக்கு நிலவைப் பற்றி விளங்க உரைக்க முடியாது. வெற்றிடமாக இருக்கும் மனதுக்கு அறிவைப்புகட்டி அகிலத்தை அறியும் படி செய்கிறது. எல்லாப் புலன்களோடும் நாக்கு தொடர்பு கொண்டிருக்கிறது. நாக்கின் கட்டுப்பாட்டிற்குள் எல்லாமே அடங்கி நிற்கும். நாக்கு நற்காரியத்தில் ஈடுபட்டால் அதனால் கிடைக்கும் பயன்கள் தாராளம். நாமும் நல்ல காரியத்தில் ஈடுபட்டால் பலன்களைத் தாராளமாகப் பெற முடியும்.

அதுவே தீய காரியத்தில் பங்கு கொண்டால் சமூகமே இழிந்து விடும். 'துதிக்கும் நாவிலிருந்து தான் சாபமும் வருகிறது' எனவே நாம் நாவைக் கட்டுப்படுத்தவேண்டும். அதனால் தான் வள்ளுவர் 'யாகாவாராயினும் நா காக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு' என்று கூறினார். நம்முடைய நாக்குத்தான் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா இன்பங்களையும் தருகின்றது. துன்பங்களைத் தானாக சேர்த்துக் கொள்கிறது. நாம் மனம் போன போக்கில் எதையும் பேசக்கூடாது 'நாவை அடக்கி ஆழாதவன் மனிதனல்ல' என்கிறார் நபிகள் நாயகம். நாம் பேசுகின்ற எந்தப் பேசச்சும் விபரீதத்தை உண்டாக்கும், எந்தப் பேச்சும் அமைதிக்கு வழிவகுக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு பேசவேண்டும். இவை இரண்டையும் சரியாக உணர்ந்து கொண்டால் நாம் மேன்மையாக வாழலாம். இல்லை யென்றால் நாம் ஒவ்வொருவரும் கீழ்நோக்கித்தான் போக வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் எதையும் அலசி ஆராய்ந்து பேசப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து பேசாவிடின் நம்முடைய நாக்கு மனம் போன போக்கில் பேசும். இதனால் பற்பல பிரச்சினைகள் தோன்றும்.

எனவே நீங்கள் உங்களின் நாவை அடக்கி ஆளுங்கள். இவ்வாறு அடக்கி ஆளமுடியாவிடின் மௌனமாக இருங்கள். நாம் எதையாவது பேசிக் கொண்டிருப்பதை விட மௌனம் சாதிப்பது மிகவும் சிறந்தது. தேவையில்லாமல் எமக்கு நாக்கு இருக்கின்றது என்று அளவுக்கு அதிகமாகப் பேசாது எல்லாவற்றையும் அளவாகப் பேசவேண்டும்.

நமக்கு எல்லோரிடத்திலும் மரியாதை கிடைக்க வேண்டுமென்றால் மௌனமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தேவைக்கு ஏற்ப சுருக்கமாகப் பேசி மௌனமாக இருப்பது நல்லது. இதனால் தான் 'பேச்சு வெள்ளி என்றால் மௌனம் தங்கம்' என்ற பழமொழி வழக்கிலிருக்கிறது. நாம் இவ்வாறு பேசி வந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம். மௌனம் சாதிப்பது அறிவு நிறைந்த செயல். இதனை நாம் பின்பற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியது நாவை அடக்கி ஆள. நாவை அடிமைப்படுத்தி விட்டால் உள்ளத்தின் கருத்து உள்ளேயே நின்று விடும். 'நீங்கள் நல்லவற்றைப் பேசுங்கள். அவற்றில் நன்மையுண்டு. கெட்டவற்றைப் பேசாது தவிருங்கள் அன்றே வாழ்க்கைப்படியில் ஏணி போல் உயர்வீர்கள்.

நம்முடைய தப்பான பேச்சினால் ஒருவருடைய வாழ்க்கையே பாழ்பட்டுப் போனால் அதனை விட வேறு எது கெடுதலாக இருக்க முடியும்? அடுத்தவனுடைய வாழ்க்கையே பாழ்பட்டுப் போனால் அதனை விட வேறு எது கெடுதலாக இருக்க முடியும்? அடுத்தவனுடைய வாழ்க்கையைக் கெடுக்கவா நாம் பூவுலகில் பிறந்தோம்? இதனை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய பேச்சினால் மற்றவர்கள் மாண்பு பெற வேண்டுமே தவிர சிறுமை அடையக் கூடாது.

நாம் மற்றவர்களுடன் நல்ல முறையில் பழக வேண்டும். இதை விட்டு விட்டு அவர்களை மட்டமாக மதிப்பிடக்கூடாது. வீணாகக் குரோதத்தை வளர்க்காமல் இருக்க வேண்டும். நாய்கள் போல ஒருவர் மீது ஒருவர் பாயக்கூடாது. கர்வத்தை ஒழித்துக் கொள்ள வேண்டும். கர்வம் கொண்டு சண்டை பிடிக்கக் கூடாது. சண்டை போட உபயோகப்படும். ஆயுதங்களைக் காட்டிலும் பயங்கரமான ஆயுதம் நாக்கு. நாக்கை அடக்கிப்பேசாவிட்டால் பெரும் ஆபத்து நேரிடும். மௌனம் எந்த ஆபத்தையும் சேர்க்காது.

கடினமான வார்த்தைகளை உபயோகப்படுத்த வேண்டாம். ஒவ்வொரு வார்த்தையையும் அன்பில் தோய்த் தெடுங்கள்.அன்பு உலகையே அடக்கிஆளும் சக்தி உடையது. அன்புக்கு அடிமையாகாதவர்கள் இவ்வுலகில் இல்லை. எனவே, உங்கள் பகைவனை அன்பால் வசப் படுத்துங்கள். இந்தப் பிணைப்பை அவனால் அறுத்தெறிய முடியாது.

**த- செந்தமிழ்**

குழந்தையின் வருங்காலம், அன்னையால் உருவாக்கப்படுவது தான். - நெப்போலியன் போனப்பார்ட்

# தாய்மடி வாசம் 14

**சுதந்திரா**

*'இந்தப் பொழுது ஏன்தான் விடிந்தது...' இன்னமும் என் இமை நனைய—என் இதயம் வலிக்கிறது. "விடியப்போனா போகேலாதேயன்ரி?"*

"அவங்கள் உள்ளுக்கை நாளுக்கு 600 பேரைத்தானே எடுக்கிறாங்கள், அடுத்தது விடிய எழும்பி இஞ்சையிருந்து வெளிக்கிட்டுப் போய்ச் சேரேலாது. அதுதான் இப்ப போய் புளியங்குளத்திலை படுத்திட்டு விடிய எழும்பி அங்கால அவங்கடை கட்டுப்பாட்டுக்க போகலாம்."

"அவங்கடை கட்டுப்பாடு" என்ற வார்த்தைகளே ஏதோ எரிச்சலைத் தந்தது. அதுவும் அந்த வவுனியா நகரம் எங்களது அல்லவா! ஆனால் அந்த நகருக்குள் நாங்கள் ஏதோ கொலைகாரர் போலல்லவா பார்க்கப்படுகிறோம். ஒலித்துக் கொண்டிருந்த அந்தப்பாடலை நிறுத்தச் சொன்னேன்.

அழகான வானமும், மாலைச்சூரியனும், அந்த ஒட்டுசுட்டான் வீதியும், இடையிடையே எங்களை விலத்திப் போன வாகனங்களும், அங்கங்கு புல்மேய்ந்து கொண்டிருந்த மாடுகளும், பாதையின் குறுக்கே வந்து நின்று போகும் மாடுகளும், வானுயரப் பறந்து திரியும் பறவைகளும், இனிதான அந்த மாலைக்காற்றும், இனிமையும், என்னோடு ஒட்ட மறுத்து நந்தாவிடமும், விழியிடமும், வன்னியில் நான் சேர்த்த உறவுகளிடமும் ஓடிக்கொண்டிருந்தது.

ஓயாத அலைகள் பொங்கியெழும் வரையும் சிங்களம் கூத்தடித்த இடங்களையும் அதனால் அழிந்த எமது மண்ணின் சொத்துக்களையும் அந்தமனிதன் எமக்குச் சொன்னது அந்தச் சமர்க்காலங்களில். இந்த மண்ணின் வலிகளை அனுபவிக்காவிடினும் அந்த வலிகளை இந்த மண்ணில் பயணிக்கும் போது புரியமுடிந்தது.

அது மாங்குளம,

"தேத்தண்ணியேதும் குடிக்கப் போறியளே!"

"இல்லைத் தம்பி நீர் குடிச்சிட்டு வாரும் நாங்கள் இருக்கிறம்."

"அப்ப இருங்கோ வாறன். வீதியின் ஓரத்தில் காரை நிறுத்திவிட்டு அந்த மனிதன் இறங்கிப் போக சுதான்ரியும் நானும் காரில் இருக்கிறோம்."

"எப்பிடியிருந்த இடங்கள் இப்ப எப்பிடி அழிஞ்சு துலைஞ்சு... அடையாளம் இழந்து..."

சொன்னா சுதான்ரி. அழகாயிருந்த மாங்குளம் மட்டுமல்ல இன்று தமிழன் வாழும் இடங்களில் ஒரு துப்பாக்கிக் குண்டாவது துளைக்காத இடமில்லையே!

நேற்றுத் திறந்த கண்டிவீதியின் மாங்குளம் பகுதியில் நின்ற அந்த நிமிடங்கள். 1992 இதே இடத்தில் வெளிநாடு போவதற்காய் அந்தவொரு இருளில் அம்மாவுடன் வந்து தேநீர் குடித்த நினைவு ஒரு மின்னல் வெட்டாய் நினைவுகளில் வந்து போனது.

*ஊரியான் கடல் தாண்டி*
*உன் மடியில் கால்வைத்து*
*நொச்சிமோட்டைப் பாலம் தாண்ட*
*இதே இடத்தில்....*

*ஓ...கண்டி வீதியே...*
*நினைவிருக்கா என்னை?*
*அந்தவொரு இருளோடு*
*அம்மாவுடன் வந்தேனே!*

*உன்னையும் என் தேசத்தையும்*
*பிரிந்து*
*பொழுது புலருமுன்னம்*
*அவர்களின் பிரதேசத்துள்*
*அவசர அவசரமாய் அழைத்து*
*ஓடிய அம்மாவின் பின்*
*நானும் அமைதியாய்*
*நடந்த போது நீயும்*
*அமைதியாய் இருந்தாயே!*
*நினைவிருக்கா?*

*அன்று அந்த இருளோடு*
*உனைப் பிரிந்து*
*போன நான் - இதோ*
*இருளுமுன்னம்*
*மாலைப் பொழுதில் வந்துள்ளேன்*
*இப்போதும்*
*உன்னை விட்டுப் போகப்*
*போகிறேன்.*

*கண்டிவீதியே!*
*உன்னிடமிருந்து நாளை*
*விடைபெற்று*
*உயரே எழும் விமானமேறி*
*புலம் போகப் போகிறேன்.*
*மறந்து விடாதே என்னை*
*மீண்டும் வருவேன்*
*இந்த மண்ணில் வாழ்வதற்கு*
*என்னை மறந்து விடாதே...*

எங்களைச் சுமந்து கார் வேகமெடுத்து கண்டிவீதியூடே பயணிக்கிறது. எங்களை விலத்திச் செல்லும் வாகனங்களும் அங்கங்கு சயிக்கிள், மோட்டார் சயிக்கிளில் பயணித்த மனிதர்களையும் தவிர வேறு யாரும் பெரிதாக நடமாட்டமில்லை. பொழுது மங்கி மைம்மல் இருட்டும் போய் முற்றாய் இருள் பரவியிருந்த கண்டிவீதியூடு எங்கள் பயணம்.

"இஞ்சை எங்கை லொட்ஜ் இருக்கு!"

வீதியில் வந்த சிலரிடம் கேட்டு இரவு 8மணிக்கு எங்களை அந்தப் புதிய இடத்தில் விட்டுவிட்டுத் திரும்பினார் சற்று முன்னர் எங்களுக்கு அறிமுகமான அந்த தமிழ்மகன். ஒழுங்காயும், அழகாயும் வடிவமைக்கப்பட்ட அந்தக் கொட்டகைக்குள் நுழைகிறோம். "இதிலை பாஸ் பதிஞ்சிட்டு போங்கோ" என்றான் அந்த இளைஞன்.

"பாய் வாங்கிறவையள் இஞ்சை வாங்கோ?"

அடுத்திருந்த கொட்டகைக் குள் நின்ற இளைஞன் சொன்னான்.

ஒரு பாயுடன் பெண்களது இடத்திற்குப் போகிறோம். மூன்று பெரிய கொட்டகைகள். முதலாவதிற்குள் போனோம் கால் வைக்க ஒரு வழியைத்தவிர வேறு இடம் இருக்கவில்லை. அடுத்த கொட்டகைக்குள் போனோம். அங்கும் இடமில்லை. அந்தக் கொட்டகைக்குள் இருந்த ஒரு அம்மா கூப்பிட்டா "இஞ்சை வாங்கோ...இதிலை இடமிருக்கு...!" எங்களை அழைத்த அந்த அம்மாவின் அருகில் எங்களது பாயையும் போட்டு தலைகளுக்கு அணையாய் எங்களது பயணப்பைகளையும் போட்டுவிட்டு அப்பாடா என இருக்கிறோம். எல்லோரும் நாளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போய்விட வேண்டுமென்ற அவசரத்தில் தங்களுக்குள் கூடிக்கதைத்துக் கொண்டிருந்தனர். பாயில் இருந்தவுடனேயே நுளம்பு ஒன்று வந்து ஊசிபோட்டு தனது வந்தனத்தைத் தெரிவித்தது. சிலர் பாயவாங்காமல் அந்தக் குறுணிக்கல் மண்ணில் படுத்திருந்தார்கள். குழந்தைகள் கூட அந்த மண்ணில் படுத்திருந்தார்கள். இந்தப்பாதையாலான பயணத்தின் சோகத்தைச் சொல்லி நின்றது அவர்களது கோலமும், படுத்திருந்த விதமும்.

அந்தக் காட்சி...பயணக் களைப்புத் தீர சற்று சாய்ந்து படுக்கவும் மனம் வரவில்லை. தாயொருத்தி தன் 6 அல்லது 7 மாதமிருக்கும் தனது குழந்தையை அந்த மண்ணிலத்தில் தன்னருகில் அணைத்துப் படுக்க வைத்து பாலூட்டிக் கொண்டிருந்தாள்.

*பஞ்சுப்பொதிக் கன்னங்களை*
*அம்மாவின் மார்போடு*
*இணைத்து பாலுறிஞ்சும் பூவே!*
*தமிழனின் குருதிகுடித்துப்*
*பெருத்த*
*கொடியவரின் குடியளிப்பின்*
*வடுவிது...*

*நீ கூட நிம்மதியாய்*
*பால் குடிக்க இடமின்றிச் செய்து*
*இந்த குறுணிக்கல் நிலத்தில்*
*படுக்க வைத்து*
*பாதையடைத்த அந்தப்*
*பாவியர்க்கு*
*முடிவுரை எழுத*
*நீயும் எழவேண்டி வரலாம்*
*எனவே இன்றாவது*
*அமைதியாய் பாலுறிஞ்சு.*

அந்தப் பிஞ்சுப்பாலன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனது அன்னையும் அவனை அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள். தன்னைக் குற்றும் நுளம்பு தன் பிள்ளையைக் குற்றாது இருக்கத் தன் சேலையால் அந்தப் பாலனை மூடிக்கொண்டு தூங்குகிறாள் அந்தத்தாய். அடிக்கடி அவனைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தபடி படுத்திருந்தாள்.

"சாப்பிடும் நாங்களும் படுப்பம்."

சொன்னா சுதான்ரி.

"எனக்குப் பசிக்கேல்லை யன்ரி."

"நாளைக்கு ஒழுங்காப் போய்ச்சேர வேணும் சாப்பிடும்."

இத்தனை வலிசுமக்க இவர்கள். நாங்களெல்லாம் எத்தனை கவனக்குறைவாய் அங்கு...

வெளியில் பனிப்பெய்து கொண்டிருந்தது. வானத்து நட்சத்திரங்களின் மின்மினி ஒளியைத்தவிர வேறெந்த வெளிச்சமும் இல்லாத வானமது. மாசிப்பனி நாளில் அம்மாவின் சேலையை போர்வையாக்கித் தூங்கிய நினைவுகள் மனசேறி நிற்க... எங்கள் வீட்டு விறாந்தையில் போய் விடுகிறது ஞாபகங்கள்.

ஒவ்வொருவரும் விடியவிருக்கும் நாளைய பொழுதுக்காக விழிகளை மூடித்தூங்கிக் கொண்டிருந்தனர். சிலர் தூக்கம் வராது விழித்திருந்தனர். எங்களுக்கு சற்று தூரம் தள்ளி அந்தத்தாய் எழுந்து யோசனையில் ஆழ்ந்திருந்தார். எல்லோரும் தூங்கவெனப் படுத்திருக்க இந்த அம்மா ஏன் விழித்திருக்கிறாள்...? கேள்விகள் மனசு முழுவதும் எழுந்து கொண்டிருந்தது.

"என்ன பிள்ளை யோசிக்கிறாய் நாளைக்கு எப்பிடியும் போகிடலாம். படணை."

"அவளுக்கு அருகில் படுத்திருந்த 55 வயது மதிக்கத்தக்க அம்மா சொன்னாள். அந்த விழிகளிலிருந்து கண்ணீர் ஊற்றெடுக்க விம்மினாள் அந்த அம்மா. படுபிள்ளை அழாதை."

உறுக்கிய அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவளாய் அழுகையை நிறுத்திக்கொண்டு விழித்திருந்தாள்.

"வவுனியாவுக்கை பிள்ளேன்ரை மனிசன் ஆசுப்பத்திரியிலை இருக்கிறான். நேற்று போகவெண்டு வந்தது இஞ்சை. ஆனா ஆமி 600பேரை மட்டும் எடுத்துப் போட்டு 120 பேருக்குக் கிட்டத்திருப்பியனுப்பிப் போட்டுது. அதுக்குள்ளை இவளும் மாட்டுப்பட்டுப் போனாள்."

அந்த வயது முதிர்ந்த அம்மாவின் வார்த்தைகள் அவை.

அனேகர் பார்வையும் அந்தப் பெண்மீது பதியவைத்தது. ஒவ்வொரு மனசும் அந்தப் பெண்ணுக்காக அழுதது. வெளியில் கண்ணீர் சிந்தாது உள்ளுக்குள் அழுதது. இருள் போர்த்தியிருந்த அந்த இரவைப்போல்...

தன் குழந்தையை இழந்த பெற்றோர், தன்கணவனை இழந்த மனைவி, தன் மனைவியை இழந்த கணவன், தகப்பனை இழந்த குழந்தை,தாய், தந்தை இருவரையும் அவர்களுக்கு கொடுத்த பிள்ளைகளின் அவலம்.... இப்படி எத்தனை பேரின் கண்ணீர் சுமந்து நிற்கிறாள் வன்னித்தாய்...! இந்தத் தமிழீழத்தாயின் துயர் துடைக்க எழுந்து விழுதான வேர்களை இழந்து அழும் உறவுகள் என எத்தனை பேரின் இழப்புகள், துயரங்கள், கண்ணீர்... இத்தனையையும் சுமந்து எப்படி வன்னித்தாயே அப்படியே இருக்கிறாய்?

*இன்றுடன் எனைப்பிரிந்து*
*புலம் போகும் மகளே!*
*இவையெல்லாம் விழுகையல்ல*
*இந்த தேசத்தின் எழுகைக்கான*
*விலைகள்...*

*நானழுது என் மேனியெங்கும்*
*வடுவாய் நிற்கிறேன்*
*இந்த உயிர்களின் வலிகளில்*
*நானும் வலிப்பட்டு, வதைப்பட்டு*
*மகளே அழுகிறேன்.*

*இவையெல்லாம்*
*இன்னும் சிலபொழுதில்*
*ஒளிந்து போய் விடும்*
*என்ன செய்ய அதுவரையான*
*அவலங்களிவை.*

*இவையெல்லாம் தேவையா என*
*எண்ணாதே மகளே!*
*இவையெல்லாம் இந்த மண்ணின்*
*ஜீவன்களின் இருப்பினையும்,*
*உயிர்ப்பினையும்*
*உறுதிப்படுத்தும் சாட்சியங்கள்.*
*போய்ச் சொல்லு மகளே!*
*புலத்துவாழ் எங்கள்*
*உறவுகளுக்கும்*
*வன்னியில் கண்ணீரும்,*
*கவலையும்*
*தேங்கிக் கிடக்குதென்று...*
*வன்னிமாதா சொல்லச்*
*சொன்னதாய் சொல்லு மகளே...*

*எங்களுக்கு வேண்டியதெல்லாம்*
*உங்களது பலமும்,*
*சர்வதேசத்திற்கு இந்த மண்பற்றிய*
*உங்கள் தெரிவிப்பும்.*

*இன்னும் இழக்காத எங்கள் சுயம்*
*இவற்றையெல்லாம் தாங்கும்*
*வல்லமை தந்த எங்கள்*
*தலைவனுக்குத் துணையிருங்கள்.*

*அதுபோதும்*
*நாங்கள் போராடிப் பெற்ற*
*இந்த மண்ணிலிருந்து - பூபாளம்*
*இசைக்கும் பொழுதைக் கொண்டு*
*வருவோம்.*

*அவையெல்லாம் நீங்களும்*
*வாழ்வதற்காய்...*
*உங்களது எதிர்காலச் சந்ததியும்*
*சொந்த மண்ணில்,*
*தன்தாய் மண்ணில்*
*வாழ்வதற்காய்...*
*எல்லாத் தமிழருக்குமான*
*சொந்த மண் விடுதலைக்கான*
*விலைகளிவை.*

*கண்ணீர்தான், இழப்புதான்*
*அழிவுதான், அவலம்தான்*
*ஆனால் போராடிப் பெறுவதே*
*விடுதலை*
*அந்தப் போராட்டமே இங்கு*
*நடக்கிறது....*

*நாங்கள் வெல்வோம்*
*நாங்கள் வென்றுவிடுவோம்*
*போய்ச் சொல்லு மகளே*
*உங்களது பலமும்*
*எங்களுக்கு வேண்டும்...*

தொடரும்....



# பிரியாத வரம் வேண்டும்



'உஸ..... மெதுவாக உங்கள் கால்களை வையுங்கள். இங்கே புனிதர்கள் உறங்குகின்றனர்' என்ற அறிவித்தற்பலகையை பார்த்தவாறு அந்தத் துயிலுமில்லத்தினுள் நுழைந்தேன். அங்கு அமைதியாய் மீளாத்துயில் கொள்ளும் மறவர்களின் கல்லறையைத் தழுவி வரும் காற்று, என் மேனியில் பட்டு புல்லரிக்க வைத்தது. அங்கே சிலர் தம் உறவுகளின் கல்லறைகளில் சோகத்துடன் மௌன மொழி பேசிக் கொண்டிருந்தனர். அங்கே பூத்துக் குலுங்கிய மலர்கள் அந்த வீர புருஷர்களின் கல்லறைக்கு காணிக்கையாகத் துடித்துக் கொண்டிருந்தன. நான் தேடிய தேமா மரம் என் கண்களில் விழுகின்றது. என் மனதில் சிட்டுக்குருவியொன்று சிறகடித்துப் பறக்கின்றது. ஏன் என் கால்களுக்கு இத்தனை வேகம்...? கீழேயும் பார்த்து நட என்பது போல் என் பெருவிரலைக் கல்லொன்று பதம் பார்க்கின்றது. நோவையும் பொருட்படுத்தாது நொண்டியவாறு நடக்கின்றேன். அருகிற் சென்றதும் அணையுடைத்தாற் போல் கண்ணீர் பெருக்கெடுக்கிறது. ஆனால், வார்த்தைகள் வெளிவராது உள்ளேயே அடங்கிவிட்டன. என் நண்பனின் கல்லறை மீது நான் கொண்டு வந்திருந்த பூக்களை வைத்து, ஊதுபத்தியும் ஏற்றி வைக்கிறேன். என் மனம் சற்று அமைதியடைகின்றது.

சுதர்சன்:... ம்.. இவனும் நானும் சின்ன வயசிலே, அதுவும் ஒண்டுக்கு நிக்கக்கூட அம்மாவின்ர முந்தானைத் தலைப்பைப் பிடிச்சுக் கொண்டு திரிஞ்ச காலத்திலயிருந்தே கண்ணும் கருமணியும் போல ஒண்டாத் திரிஞ்சனாங்கள். இவன் குங்குமமும், சந்தனமும் சேர்ந்த மாதிரி நிறம். நான் பனை மாதிரி வெள்ளை. இவன் ஆள் கொஞ்சம் விசயகாரன். ஒருக்கா நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கேக்க இவன் என்னட்ட "டேய்...ஆயிரமோ, தொள்ளா..யிரமோ.. பெரிசு"எண்டு கேட்டான். இவன் தொள்ளா...யிரம் என்று இழுத்துக் கேட்க, நானும் தொள்ளாயிரம் தான் என்று இவனிலும் பார்க்கக் கூட இழுத்துச் சொன்னன். அதை இப்ப நினைச்சாலும் சிரிப்பு வரும். முருகேசு மாஸ்ரரின்ர காணி, அதை என்னெண்டு மறக்க..? மாஸ்ரற்ற வளவுக்க மாங்காய் களவாய் புடுங்கப்போய் அந்தாள் கலைக்க நாங்கள் ரெண்டு பேரும் ஓடி, இவன் கம்பிக்காலே பாஞ்சு ஓடிட்டான்; நான் பாயமாட்டாமக் கம்பியில கொழுவுப்பட்டு, வாத்தியார் என்ன மரத்தில கட்டிப் போட்டிட்டுப் பிரம் பெடுக்கப் போயிட்டார். மாஸ்ரர் இந்தப் பிரம்புக்கு உப்புத் தடவி வைச்சிருக்கிறார். பள்ளிக்கூடத்தில அவரிட்ட வாங்கின அடி இப்பவும் தழும்பு கிடக்கு. எனக்கெண்டாப் பயங்கர கலக்கம். அவர் பிரம் பெடுக்கப் போக, இவன் வந்து என்னை அவிட்டு விட்டிட்டான். அ: விட்டு விட்டதும் பத்தாமல் "மச்சான் ரெண்டு மாங்காய் புடுங்குவமே"என்றான். நான் பயந்து போய் "வேண்டாம் மச்சான் மாஸ்ரர் வந்துடுவார்" என்று சொல்லி வாய் ஆற வில்லை; வாத்தி பிரம்போட வந்திட்டுது. எனக்கு ஈரல் கருகி வரண்டு போச்சு. "வாடா ஓடுவம்" என்று சொல்லிப் போட்டு, நான் தான் முன்னுக்கு ஓடி வந்தனான். இவன் மாஸ்ரருக்கு நாங்கள் வச்ச பட்டப் பெயரைச் சொல்லிப் போட்டுத்தான் ஓடி வந்தான். பள்ளிக் கூடத்தில வாத்திக்கு



நாங்கள் 'சீப்பிளேன்' எண்டு பட்டப் பெயர் வச்சனாங்கள். ஏனென்றால், இவர் எல்லாரையும் சுற்றி வந்து, அதிபரட்ட போய் அண்டி விடுறவர். அப்ப சீப்பிளேன் தான் இந்த வேலையைச் செய்தது, இப்ப வண்டு.

எங்கட பிள்ளையார் கோயில் திருவிழா என்றால், எங்கட ஊரே களைகட்டிடும். திருவிழாக்கள் வலு சிறப்பா நடக்கும். நானும், இவனும் எந்த நேரமும் அங்கதான். அங்கத்தப் பெடியளோட காசு எறிஞ்சு விளையாடுறதும், போளை அடிக்கிறதும், அப்ப பழைய போளை என்றா அம் பேசம், புதுசு என்றா ஒரு ரூபா என்று விப்பாங்கள். கோயிலில நிகழ்ச்சியென்றா அதுவும் சின்னமணி வில்லிசை, இராஜன் இசைக்குழு என்றா நாங்கள் அங்கதான் இருப்பம். இருப்

**புனிதன்**

பமெண்டு சொல்லுறதைவிடக் கிடப்பமெண்டு தான் சொல்ல வேணும். அந்த இடத்துப் புழுதியெல்லாம் எங்கட மேலில தான். அப்பியேயே வீட்ட போனா கோயிலில பார்த்த விட, மிச்சப் பூசை அம்மாட்ட வேண்டி, அம்மா குளிக்க வாத்து விட்டாப்பிறகும் கோயிலுக்குத்தான் ஓடுறது. வீட்ட போகேக்க ரெண்டு பேரும் பிரிஞ்சாலும், கோயிலில சந்திப்பம். சந்திச்சா "எப்படி வீட்ட இண்டைக்குப் பூசை? பயங்கரமாய் இருந்திச்சுதே...?" என்று கேட்டு இவன், தனக்கு விழுந்த தழும்புகளை எனக்குக் காட்டுவான். நான் என்ர தழும்புகளை அவனுக்குக்காட்டிச் சந்தோசமாய்ச் சிரிப்பம். அந்த நிமிசத்தில வாங்கின அடியெல்லாம் மறந்து போகும்.

இப்படித்தான் ஒருக்கா கடைசித் திருவிழாவுக்கு மணிக்கடை நிறைய வந்திருந்தது. நாங்கள் அங்க பம்பல் பார்த்துக்கொண்டு திரிஞ்சம். என்னென்ன வடிவான சாமான்கள். பாத்துக் கொண்டே இருக்கலாம்... குரங்கு ஒண்டு வைன் குடுத்துவிட மோம் அடிக்குது..... ஒரு கமரா இருந்திச்சு.. அதைக் கண்ணுக்குக்கிட்ட வச்சு அமத்தினா படங்கள் வரும். அதுக்கு ஒவ்வொரு தட்டாமாத்த வேணும். பன்ரெண்டு தட்டிருக்கு.. எனக்கு அந்தக் கமராவில ஒரு கண். அதையே பாத்துக் கொண்டு நின்றன். இவன் இதைக் கவனிச்சிட்டான். "என்ன விலையண்ண அந்தக் கமரா..?" "பன்ரெண்டு தட்டோடயும் நூற்றியம்பது ருபா" என்றார். இவன் அத வேண்டி என்னட்ட நீட்டினான். "மச்சான, உந்த விலைக்கு வேண்டாமடா" என்றன். "டேய், உன்ர அன்புக்கு முன்னால இது வெறும் கண்டங்காய் மச்சான்" என்று சிரித்தான். இவன்ர சிரிப்பில நான் மௌனமாகிப் போனேன்.

ஊரிலே எங்களப் பார்க்கிற பெடியளுக்குப் பொறாமை. அவையின்ர தாய், தகப்பன் அவங்களைத் திட்டேயுக்குள்ள 'அவங்களைப் பார்' எண்டு எங்களச் சாட்டித்தானாம் திட்டு வினம். நாங்கரெண்டு பேரும் ஒண்டாத்தான் பள்ளிக்கூடம் போவம். ஒருக்கா எனக்கு மலேரியாக் காய்ச்சல் வந்திட்டுது. அதால கொஞ்சநாள் பள்ளிக்கூடம் போகயில்ல. நான் தான் போகயில்ல எண்டா இவனும் போகயில்லை. "நான் எத்தின தரம் செல்லுறது மச்சான்...நீ பள்ளிக்கூடம் போ.." "டேய் உனக்குக் காய்ச்சல், உன்னை அடிக்கடி பாக்கோணும் மச்சான்; உனக்கு மருந்து பேணி எடுத்துத்தரோணும்...நான் பள்ளிக்கூடத்துக்குப் போனால் எனக்கு அங்க படிப்பே ஓடாது, உன்னைப் பற்றித்தான் நினைப்பன்.." என்று சொல்லி கதைக்காம செய்து போடுவான். இவன்ர அப்பா விதானை. இவைன்ர வீட்ட காசு நல்லாப்புளங்கும். ஒரு கிழமைக்குள்ள மூன்று மாப்பேணி வாங்கிவந்திட்டான். படிப்பிலே ஆள் வலுவின்னன். பள்ளிக்கூடத்தில முதலாம் பிள்ளையா வருவான். படிப்பில மட்டுமில்ல நாடகம், விளையாட்டு எல்லாத்திலயும் இவன ஆளில்லை. ஓட்டப் போட்டியில இவன் ஓடுற வேகத்தைப் பார்த்தா, எனக்கே பொறாமை வரும். போட்டியில இவன் பரிசு வேண்டேயுக்க என க்கு சந்திர மண்டலத்தில நிக்கிறமாதிரி புழுகம். இவன் வாங்கின பரிசுகள், இவன்ர வீட்டில சோகேஸ் நிறைய அடுக்கி வைச்சிருக்கும். இவன் ஓடுறதுக்கு கிரவுண்டில இறங்கினா ஒரே கைதட்டலும், விசிலடிப்புந்தான். சத்தம் செவிப்பறையைக் கிழிச்சுப்போடும். இவன் என்னையும் விடான். "மச்சான், நீயும் ஒருக்கா ஓடிப்பாரன்..." என்று சொல்ல நானும் ஓடி ஒருக்கா மூன்றாம் இடத்தில வந்தனான். அதுக்கே இவன் நாலைஞ்சு பேரோட வந்து என்னக் கட்டிப்பிடிச்சுத் தூக்கிப் பெரிய ஆரவாரம்.

எங்கட ஊர் சின்ன ஊர் தான். எண்டாலும் வனப்பு மிகுந்த கற்பகச்சோலை, பேருக்கு ஏற்றாப்போல ஊர். எங்க பாத்தாலும் பனங்கூடல். இருண்டா அந்தப் பனங்கூடலுக்கால போறதுக்கு எனக்குச் சரியான பயம். நிலவு நேரத்திலயும் அதுக்குள்ள இருட்டு. ஒருக்கா நான் பனங்கூடலுக்கால வரேக்குள்ள இவன் ஒளிச்சிருந்து வெருட்டி எனக்கு மூன்று நாள் காய்ச்சல். ஊரில என்ன நல்லது, கெட்டது நடந்தாலும் இவன் அங்க நிப்பான். என்னையும் விடமாட்டான். இவனத் தேடுற பெடியள் என்னட்ட வருவாங்கள். என்னைத் தேடுறவங்கள் இவனிட்டப் போவாங்கள். பள்ளிக்கூடத்தில வாத்தியார் கூட இணைபிரியா அன்றில் என்று சொல்லுறதுக்குப்பதிலா எங்களைத்தான் உதாரணம் சொல்லுவார். ஒருக்கா எனக்கு வாத்தி அடிச்சுப் போட்டுது. இவன் அந்தாளின்ர சைக்கிள் ரியூப்புக்க குண்டூசியை ஏத்திற்றான். "ஏன்ரா மச்சான், இப்படிச் செய்தனி" என்றால் "சும்மா இரு மச்சான்... அவர் உனக்கு அடிப்பார் நான் பாத்துக் கொண்டு இருக்கோணுமாக்கும்..." எனக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியாமப் போயிடும். ஒவ்வொரு ஞாயிறும் நாங்கள் கடலுக்குக் குளிக்கப் போறனாங்கள். நாங்கள் ஒரு செற் போனா, சும்மா போறயில்ல. பாண், கறியோட தூண்டிலெல்லாம் கொண்டுதான் போறது. அங்க ஆரட்டயும் கருவாடு, மீன் வேண்டி சுட்டுத் தின்னுறது தான் வேலை. பிறகு பம்பலாகக் குளிப்பம். நெடுகிலும் இவன் தான் பாண், கறி வேண்டுறது. எனக்கு இவனுக்கு வேண்டிக் குடுக்கோணும் எண்டு கனநாளா ஆசை. அதுவும் என்ர காசில. அண்டைக்கு நான் வீட்ட அம்மாட்டக் காசு வேண்டிக் கொண்டு முதலே பாண் வேண்டிக் கொண்டு போனன்.அவன்ர முகம் உடனே கறுத்து இறுகிப்போச்சு. குளிச்சிட்டு வரும்வரை இவன் என்னோட கதைக்கேல்ல. இவன் சரியான பிடிவாதக்காரன். நான் பிறகு " என்ன மச்சான், என்னோட கோவமே...?" "நீ..சும்மா கதையாத மச்சான், ஆர் உன்னைப் பாண் வேண்டச் சொன்னது?" தனக்கே உரித்தான உரிமையுடன் கோபித்துக் கொண்டான். "இல்ல மச்சான், நெடுக நீ தான பாணவேண்டுறனீ, எனக்கு நீ எவ்வளவு செய்திருக்கிறாய்..? உனக்கு என்ர காசில ஏதாவது வேண்டித்தர வேணுமென்று ஆசை மச்சான். அதுதான்.." சொல்லி முடிக்கமுதல் அவன் கண்களில் நீர்திரண்டது. "வேண்டாம் மச்சான், நான் இருக்கு மட்டும் உனக்கு நான் தான் காசு செலவளிப்பன். அந்த உரிமையை என்னட்ட இருந்து பறிச்சிடாதே...? அடி மனதைப் பிழியும் சோகத்துடன் கூற, என் விழித்திரையிலும் நீர் திரையிட்டது. அன்றிலிருந்து இவன் தான் எல்லாமே.

அன்று கடல் உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தது. அலைகள், வெண்பஞ்சுக் குவியல்கள் காற்றில் உருண்டு வருவது போல், வருவதும் போவதுமாயிருந்தன. அந்த அலையிலொன்று இவன் எழுதிக் கொண்டிருந்த எதையோ, மணலைத் தன் கரங்களால் தடவி குறும்பு செய்து கொண்டிருந்தது. எல்லாரும் இறங்கிக் குளிக்கிறாங்கள், ஏன் மச்சான், நீ வரேல்ல" "மச்சான், நான் ஒண்டு சொன்னாக் கோவிப்பியே....?" "சொல்லாட்டித்தான் கோவிப்பன். என்ன இண்டைக்கு சுத்தி வளைக்கிறாய், ஏதேனும் ..ம்.." ஒரு கணம் என்னைப் பாத்தவன் "மச்சான், நான் எங்கட விடுதலைப் போராட்டத்தில இணையப் போறன். ஆனா உன்ன என்னெண்டு விட்டிட்டுப் போறதெண்டுதான..?" "ம்..இண்டைக்கு என்ன திகதி? அத முதல்ல சொல்லு, ஏப்பிரல் பூல் இல்லத்தானே?" "இல்ல மச்சான், நான் சீரியசாத்தான் செல்லுறன், எங்கட நாட்டுக்காக ஒவ்வொருத்தனும் போராட வேணும் எண்ட நான் இப்ப நல்லா விளங்கிக் கொண்டிட்டன்." கடற்காற்று ஒன்று வேகமாக வந்து என் முகத்தில் மோதிவிட்டு செல்கிறது. "நீ என்ன கதைக்கிறாய் மச்சான்..? இந்த முறை எழுதப்போற ரெஸ்ரில உனக்கு நல்ல றிசல்ஸ் வரும். அதால உனக்கும், உன்ர அம்மா, அப்பாவுக்கும் ஏன் எங்கட பள்ளிக்கூடத்திற்கும் நல்ல பேர் கிடைக்கப் போகிதெண்டு எல்லோரும் எதிர்பார்க்கேக்குள்ள நீ இப்பயொரு முடிவெடுத்திருக்கிறாய் மச்சான்" "இல்ல உனக்குத் தெரியுந்தானே, நான் முடிவெடுத்திட்டா அதமாத்த மாட்டனெண்டு. மச்சான், இஞ்ச இருந்து தான் அம்மா, அப்பாக்கும் பள்ளிக்கூடத்துக்கும் பெருமை சேர்க்கோணுமெண்டில்லை. இயக்கத்தில் போய்ச் சாதிச்சாலும் அம்மா, அப்பாவுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் ஏன் இந்த ஊருக்கும் பெருமை தான் மச்சான். நான் வீரச்சாவடைஞ்சாலும் இவை என்ர பேரைச் சொல்லும், ஆனால்...." "என்ன ஆனால்" "உன்ன விட்டிட்டு நான் மட்டும் தனிய போகப் போறன். இந்த விசயத்தில நான் எந்த முடிவையும் எடுக்க முடியாது மச்சான்....." "டேய், ஒவ்வொரு நிமிசமும் இருவருக்கும் ஒரு முடிவுதான் இவ்வளவு நாளும். இன்று மட்டும் நீ ஏன் இப்படி?"

ஒண்டாத் திரிஞ்சு, ஒண்டாப் படிச்சு, ஒரு கோப்பையில சாப்பிட்டு, ஒண்டா இயக்கத்துக்கு வந்து, ஒரே படையணியில இருந்து நாங்கள் விரும்பின மாதிரியே சுதர்சன், நிதர்சன் என்று பெயரும் வச்சு, நினைச்சது போல எல்லாம் ஒன்றாகத்தான். நாங்கள் ஒன்றாக இருந்தது அந்த எதிரிக்குப் பிடிக்கவில்லை போல. எங்களைப் பிரிச்சிட்டான். எங்களை நரம்புகள் திரள ஆவேசத்துடன் கத்தியவன், கையில் ஏதோ நசிபட கையைப் பார்த்தான். கையிலிருந்த பூக்கள் அடையாளம் தெரியாமல் உருமாறிப் போயிருந்தன. ■

சிறந்த கவிஞர் வேண்டுமென்றால், கவிதைகளை ரசிக்க, சிறந்த ரசிகர்களும் வேண்டும். - வால்ட் விட்மன்

பெண்களின் உரிமைக்குரலாக பிரகடனப்படுத்தப்பட்ட
உலக மகளிர் தினமான மார்ச் - 08 ஐ ஒட்டி...



# மனச்சாட்சி

யாழ்வீரன்

ஏய்... சமுதாயமே!
எம் இழப்புக்களுக்கெல்லாம்
நீயும் பதில்சொல்லியே ஆகவேண்டும்.
உனக்குப் பயந்து பயந்துதானே
நாமெம்
பாதிவாழ்க்கையை இழந்து போனோம்.

உனது
சந்தேகப்பார்வைகளால் தானே
எமது சந்தோசவாழ்வு
பொலிவிழந்து போயிற்று.

கை - கால் வைத்த
உந்தன் கட்டுக்கதைகளுக்கு அஞ்சித்தானே
எம்
கள்ளமில்லா நட்புள்ளங்களுக்கு
நாம் கண்ணீரோடு
கையசைத்து விடைகொடுத்திருக்கின்றோம்.

உன்
எல்லா வார்த்தைகளையுமே
மந்திரமாக கொண்டதனால் தானே
எம் வாழ்வு
மௌனக்காயங்களைச் சுமந்து நடக்கிறது

பாவிகளே!
முடிவெடுக்கத் தெரியாத
எம் குழந்தை மனதை
உங்கள் முட்டாள்தனங்களாலல்லவா
முக்காடு போட்டுவிட்டீர்கள்.

விடு எம்மை
நாம் விரிந்த வானம்
கட்டுக்களேதுமற்ற காற்று.
நீ கிழிக்கும்
கோடுகளின்மீதே நடந்து கொண்டிருக்க
எமக்குச் சம்மதமில்லை.

எம்மை
எம் வழியே போகவிடு.
எதை வேண்டுமானாலும் நீ கத்தித்தொலை.
உன் கூச்சல்களுக்கும்
புறுபுறுப்புக்களுக்கும்
நாமினி செவிசாய்க்கப் போவதேயில்லை.

எம்மை இனி
எம் மனச்சாட்சியே வழிநடத்தட்டும்.

# பெண்ணுரிமை நிலைநாட்டு



பார் போற்றும் பங்குனி எட்டு
பெண்ணுரிமை நிலை நாட்டு!

வென்று வென்று வருகிறோம்; ஆனாலும்
வெற்றி முழுமை பெறவில்லை!
கன்று துள்ளித் துள்ளி ஓடும்
கயமை எள்ளி நகையாடும்; பெண்மை
தின்று பசி யாறும்; பல
தீய்ந் தொழிந்து போகும்!
அன்று அடைந்தாய் கூடு
இன்று வென்றாய் மேடு!

பார் போற்றும் பங்குனி எட்டு
பெண்ணுரிமை நிலை நாட்டு!

பெண்மை எழுச்சி பேசும்
பெருமை கொண்ட உலகே
கண்ணைக் கருத்தைக் கவரும்
காட்சி நிலை மாற்று!
பண்பை அறிவைப் போற்றும்
பற்றுக் கொண்டு ஏற்று
உண்மை உயர்ச்சி வீசும்
உரிமை என்றும் வழங்கு!

பார் போற்றும் பங்குனி எட்டு
பெண்ணுரிமை நிலை நாட்டு!

இராஜி சண்முகநாதன்



# ஓர் அகதிப் பறவையின் புதுவெளிப்பா(ட்)டு

சு.வில்வரெத்தினம்

எங்கெங்கே முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க

முந்தி முந்தி முக்கணனார் தன்
மகனருளால் நான் பெற்ற
குஞ்சுகளெல்லாம் கூடி
இந்துமாகடல்வெளியினிலும்
காட்டு வெளிகளிலும்
கழனி வயல் பரப்பினிலும்
அக்கினிக் குஞ்சுகளாய்
ஆகுதி ஆன கதை
ஊரறியும் நாடறியும்
உலகம் முழுதறியும்

எங்கெங்கே முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க

குடிப் பெருக்கம் கெட்டு
கூறு பலவான குடி
இருந்து வளம் பெருக்கவொரு
குடியிருப்பு வேணுமெண்டு
நானலைஞ்ச அலைச்சல்
நாயலைச்சல் பேயலைச்சல்
நாலு திசையலைச்சல்
ஊனறுந்து குருதி சிந்தி
உந்திக்கொடி இழுவுண்ண
உலைஞ்ச கதை உலகறியும்

எங்கெங்கே முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க.

அகதிப்பறவையாய் நான்
ஏழு மலை சுத்தி வந்தேன்
இருந்தாற்' முட்டை இட
எனக்கோா இடமில்லையே

ஏழுகடல் தாண்டி வந்தும்
இளைப்பாறி முட்டையிட
ஆன இடம் கிடைக்கலையே
அகதிப் பெயர் போகலையே

கல்லைக் குடைந்து முட்டை
கடலோரம் இடுவமென்றால்
மாயக் குறத்தி மக்கள்
வைச்ச கண்ணி எடுக்கலையே

காட்டிலே கூடு கட்டி
கலந்து முட்டை இடுவமென்றால்
நீட்டுக்கு எரியுதையோ
நேச உயிர்க் காடலவோ.

எங்கெங்கே முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க

நானுழுத வயலோரம்
நாலு முட்டை இடுவமென்றால்
பாவி அயலவனும் உயர்
பாதுகாப்பு வலயம் என்றான்

நானிருந்த குடிநிலத்தில்
நானிருந்து குடியோச்ச
நாட்டாமைக்காரரல்லோ
நச்சுப் பல்லி ஆகிறாரே

போர்க்காலம் போச்சு
புரிந்துணர்வில்
அடைகாப்பமென்றால்
ஆர்ப்பாட்டம் பண்ணுகிறார்
ஆத்தலைஞ்சு போவேனோ

எங்கெங்கே முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க

இருந்து நிலம் திருத்தி
இளஞ்சந்ததிகள் தான் பெருக்கி
தாலாட்டுத் தமிழ் பாடி
சாய்ஞ்சாடம்மா சாய்ஞ்சாடு பாடி
சப்பாணி கொட்டச் சொல்லி
ஆனையேறுவான் தம்பி
ஆனையேறுவானென்று
ஆனையேற்றம் குதிரையேற்றம்
அவர்க்குப் பயிற்றுவிக்க
ஆனதொரு நிலமிலையே
அகதிநிலை மாறலையே

அகதிப்பறவையென
ஆத்தலைஞ்சு எங்கெங்கோ
அகதிமுகாம் மூலைகளில்
அகதி முட்டைகளிட்டு
அகதிக் குஞ்சு பொரிப்பதுவோ

எங்கெங்கே முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க

என்னை விடுங்கள் இனி ஏழு
மலைக்கப்பால் போகவேணும்
பொன்னுமலை பவளமலைக்கும்
அப்பாலே போகவேணும்

அகதிப்பறவையல்ல ஆரின்
அதிகாரக் கூட்டினுள்ளும்
அடங்கும் பறவையல்ல
ஆகாய விடுதலைப்பறவை
அக-வெளி விடுதலைப் பறவை

எங்கே இனி முட்டையிட
எங்கே குஞ்சுகள் பொரிக்க


ஆகாயத்தில் பறந்தபடி
ஆகாயத்தில் கருக்கூடி
ஆகாயத்திலே முட்டையிடுவேன்
ஆகாய ஒளிச் சூட்டிலேயே
குஞ்சு பொரித்தி டுவேன்
அங்கேயே செட்டை
முளைத்துப் பறக்கின்ற
அத்தனையும் எந்தன்
அற்புதக் குஞ்சுகளாம்
ஆகாயக் குஞ்சுகளாம்

நான் பொரித்த குஞ்செல்லாம்
வான் பொரித்த குஞ்சுகளாம்
வான் பொரித்த குஞ்செல்லாம்
வாழ்வொளிரும் குஞ்சுகளாம்

வாழ்வொளிரும் குஞ்செல்லாம்
மண்ணிற் கொருநாள் திரும்பும்
மாண்டவரின் சாம்பலிலே
வாழ்வொளியை மீண்டெழுதும்

ஆனாலும் ஆனாலும்
ஆகாயம் தானவற்றின்
அடைகாப்பு மையமாகும்
ஆனந்த வெளியாகும்.

கவிஞனாய் இருப்பது, ஒரு தொழிலல்ல; அது ஒரு மன நிலை. - ராபர்ட் கிரேவ்ஸ்



# இளையநாதம்

## பொதுஅறிவு

01) இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்படுபவர் யார்?
மார்கிறட் தட்சர் (இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர்)

02) கொழும்பு விக்ரோரியா பூங்கா எத்தனையாம் ஆண்டு விகாரமகா தேவி பூங்காவாக மாற்றப்பட்டது?
1958 இல் மாற்றப்பட்டது.

03) குதிரை வலு (Horse Power) யாரால் கண்டறியப்பட்டது?
ஜேம் வாற் என்பவரால்

04) சீனப் பெருஞ் சுவரின் நீளம்?
3219Km

05) 24 மணி நேரத்தில் நமது இதயம் எத்தனை தடவை துடிக்கின்றது?
103689 தடவை

06) முதலாவது இந்தியப்பெண் விஞ்ஞானி யார்?
அடலா போஸ்

07) உலகிலேயே மிகப் பெரிய மாளிகை எது?
வாடிகன் மாளிகை.

08) நாணயங்கள் செய்யப்படும் உலோகம்?
நிக்கல்

09) இரத்தத்தால் எழுதப்பட்ட மதநூல் எது?
"லங்கா வீரன் சுத்ரா" என்பதாகும்.

10) இலங்கையில் இலவச கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1945ஆம் ஆண்டு.

கோசலா மகான்
தரம் - 10A
கிளி/வட்டக்கச்சி. ம. வி

## நகைச்சுவை




போர் வீரன் 1: ஏன்டா கத்திக்கொண்டு நிக்கிறாய்.
போர் வீரன் 2: ஐயோ! என் கை துண்டாய்ப் போச்சுதடா....
போர் வீரன் 1: டேய்! அங்க பார் உந்தத் தலை போனவனே கத்தாமல் இருக்கிறான். நீ உந்தக் கைபோனதுக்கு கத்திக்கொண்டு நிக்கிறாய்.

இ.ராஜ்குமார்
மு/புதுக்குடியிருப்பு ம.வி

## வாரம் ஒரு குறள்



உலகம் உய்யவேண்டுமானால் மனித வாழ்வு ஒழுங்குடன் பேணப்பட வேண்டும். அது இரண்டு வகையாக வாய்க்கப்பெறும் - ஒன்று, நல்ல ஒழுக்கம் . மற்றையது தாம் தாழ்வான செயல்களைப்புரியும் போது ஏற்படும் மனக்கூச்சம். இவை இரண்டும் நற்குடியில் பிறந்தவர்களிடத்திலே இயல்பாகவே உள்ளவையாகும். மற்றவர்களுக்கு இவற்றைப் போதித்தாலும் அவை நீண்ட காலத்திற்கு நிலைக்கமாட்டாது. ஆகையால் ஒழுங்கான வாழ்க்கையை மேற்கொள்பவர்கள் மறந்தும் தீயவற்றைப் புரிய மாட்டார்கள். இப்படி நடந்து கொள்பவர்களாலே தான் நல்வாழ்க்கை என்பதும் நற்குடி என்பதும் பேணப்பட்டு வருகிறது. அதைத் திடமாகச் சொல்ல விரும்பிய வள்ளுவர்.

"இற் பிறந்தார் கண்ணல்லதில்லை இயல்பாகச்
செப்பமும் நாணு மொருங்கு"

என்று குறள் படைத்துள்ளார்.

## பென்குயின்



அன்டார்டிக்கா கண்டத்தில் வாழும் பென்குயின் பறவைகளின் உடல் கடுங் குளிரைத் தாங்கும் அளவு உறுதியானவை. ஐஸ் போன்ற நீரில் நீண்டதூரம் நீந்தும். பென்குயின் பறவைகளிலேயே மிகவேகமாக நீந்தக் கூடிய "ஜென்ட் பென்குயின்" ஆகும். இது மணிக்கு 27.4Km வேகத்தில் நீந்தக்கூடியது.

சு.கௌரீசன்
மு/வித்தியானந்தக்கல்லூரி

## கூடி வாழ்வோம்



அன்னை தந்தை
ஆசானை என்றும்
அன்பு செய்யும்
மாணவராய்
என்றும் நாம் கூடியே
சிறந்து நன்றாய்
வாழ்வோம்.



அ.தமிழீழன்
ஆண்டு -1
மு/மல்லாவி/மத்திய கல்லூரி



கைவண்ணம்

ச.ஆஷா,
சிவநகர் அ.த.க.பாடசாலை

## முயற்சியே வெற்றி

சுகுணா, செல்வி, சுமதி மூவரும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவிகள். இவர்களில் சுகுணா படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காறி.

அன்று விடுமுறை நாள். செல்வியும், சுகுணாவும் அவர்களின் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தேடி சுமதி வந்தாள். அவளைக் கண்டதும் "வா விளையாடுவம்" என்று சுகுணா அழைத்தாள்.

சுமதியோ, "இண்டைக்கு 3.00 மணிக்குப் பிறகு ரீச்சர் வரச்சொன்னவா வா போவம்." நாளைக்குச் சோதினை; விளங்காத பாடத்தை விளங்கப்படுத்திவிடுறன் என்று ரீச்சர் சொன்னவா" என்று கூறினாள்.

"நான் வரவில்லை; எனக்கு எல்லாம் விளங்கி விட்டது." என்று சுகுணா மறுத்தாள்.

"ம்...அப்ப உனக்கு நூறுதான்." என்று சுமதி சொல்லிச் சென்றாள். "உனக்கு வேற வேலை இல்லை; போய்ப்படி" என்றாள் சுகுணா. "ஓடி ஓடிப் படித்தாலும் நீ பின்னுக்குத் தானே" என்று சொல்லி நக்கலாகச் சிரித்தாள் சுகுணா.

"எனக்கு நேரம் போகுது" என்று கூறி சுமதி வேகமாகச் சென்றாள். நன்றாய்ப் படித்து முதலாம் பிள்ளையாய் வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டு வகுப்பிற்குச் சென்றாள். வகுப்பு முடிந்ததும் வீட்டிற்கு வந்தாள். அங்கு படித்த பாடத்தை மீண்டும் திரும்பப் படித்தாள்.

அன்று செல்வியின் மாமா வீட்டில் படம் போட்டார்கள். செல்வியும், சுகுணாவும் படம் பார்க்கச் சென்றார்கள். சுமதியைத் தேடினார்கள். சுமதி அங்கு வரவில்லை. செல்வியும், சுகுணாவும் படப்பைத்தியமானார்கள்.

அடுத்த நாள் அவசர அவசரமாக பாடசாலைக்கு இருவரும் சென்றார்கள். அவர்கள் ஆண்டிறுதிப் பரீட்சையில் ஏதோ எல்லாம் எழுதி முடித்தார்கள்.

மாதமுடிவில் பெறுபேறு அறிவிக்கப்பட்டது. சுமதிதான் முதலாம் பிள்ளை.


செல்வியும் சுகுணாவும் மௌனமாக இருந்தார்கள்.

அதிபர், ஆசிரியர்களும் சுமதியின் முயற்சியைப் பாராட்டினார்கள். "சுமதியைப் போன்று நீங்களும் படித்து முன்னேற வேண்டும். நீங்களும் முயன்று பாருங்கள், "முடியாது என்பது கிடையாது." என்று வகுப்பாசிரியர் கூறினார். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்." என்பதனையும் விளக்கிக் கூறினார்.

செல்வியும், சுகுணாவும் தாங்கள் படிக்காது காலத்தை வீணாக்கி விட்டதை உணர்ந்தார்கள். இனியும் இந்தத் தவறைச் செய்யக்கூடாது என்று திடம் கொண்டார்கள்.

செந்தமிழ்

## குறுக்கெழுத்துப் போட்டி 10




### இடமிருந்து வலம்

01. கதிரவனைக் கண்டு மலர்வது.
07. குழந்தையைத் தூங்கவைக்கும் பாடல்.
18. பசுவைக்கொடையாக கொடுத்தல் தலைகீழாக உள்ளது.
21. ஈடாகவைத்தல் குழம்பி உள்ளது.
34. சரஸ்வதி இறுதி இரு எழுத்தை இழந்து குழம்பியுள்ளது.

### மேலிருந்து கீழ்

01. இதில் தோற்றதால் நளன் நாடு இழந்தான்.
06. இங்கு இயற்கைத் துறைமுகம் உள்ளது.
09. காற்றில் பறக்க விடுவது குழம்பியுள்ளது.
17. பிறந்தநாடு குழம்பி உள்ளது.
20. காடும் காடுசார்ந்த இடமும்
28. சந்திரன் தலைகீழாக உள்ளது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.8 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01.பணிக்கன்
07.ஆயம்
11.ஓரி
14.ஆகாமியம்
19.துப்புரவு
28.வெயில்
31.தை
33.தியாகம்

**மேலிருந்து கீழ்**

01.ஆபத்து
02.ஆரணியம்
09.காம்பு
12.ஓம்

போட்டியாளர்கள் எவரும் சரியான விடைகளை எழுதவில்லை.

**இளையவர்களே!** மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.10
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# குழந்தைகளுக்கான கல்வி

**நாகரீகம** வளர முன்னர் காட்டிலே இலை குளைகளிலான குடிசைகளை அமைத்து வாழத் தொடங்கினான்மனிதன். கொஞ்சம் கொஞ்சமாக சிந்திக்கத் தொடங்கியவன் காட்டை விட்டு குகைக்கு வந்து குகையை விட்டு குளக்கரைக்கு வந்து இப்போது செவ்வாய் வரை சென்றுவிட்டான். அது அவனது முயற்சி படிப்படியான வளர்ச்சி எல்லாவற்றிற்கும் அடிப்டையான ஓர் அத்திவாரம் பலமாக அவனது மனதிலே இடப்பட்டிருக்கிறது. மாறாக் குறிக்கோள் வலுவாக அத்திவாரத்தின் மீது எழுப்பப்பட்டிருக்கிறது. அதனாலேயே அவன் முழுமையான வளர்ச்சியைத் தொட்டிருக்கின்றான். தொட்டுக்கொண்டிமிருக்கிறான். அவ்வளர்ச்சி இனிப்பட்டுப் போவதுமில்லை. அதனை தடுக்கவும்முடியாது.

பொதுவாக குழந்தைகளின் கல்வியில் கவனம் செலுத்துவ தென்பது மிகமிகக் குறைவு. "சின்னப் பிள்ளைதானே" "இன்னும் அறிவுவளர எவ்வளவு காலம் கிடக்கு" "வயது போகேல்லத் தானே" "பிறகும் படிப்பிக்கலாம் தானே" இப்படித்தான். உங்களுக்கு நன்றாகத் தெரியும் 'அத்திவாரம் ஆட்டங்கண்டால் அடுத்த கணமே அடுக்கு மாடியெனினும் அலங்கோலமாகிவிடும்' என்பது. இதே போன்றுதான் குழந்தைகளின் பெற்றோர்கள் என்றாலும், உறவுகள் என்றாலும், பாதுகாவலர்கள் என்றாலும், ஆசிரியர்கள் என்றாலும், வழிகாட்டுபவர்கள் எவராக இருந்தாலும் குழுந்தைகளின் கல்விக்கான அத்திவாத்தை, அடித்தளத்தை உறுதியாக அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுடையகைகளில் தான் தங்கியுள்ளது.

குழந்தைகளைப் படிப்பித்து அவர்களுக்கென்றொரு சிறந்த எதிர் காலத்தை அமைத்துக் கொடுக்கும் வரை அவர்கள் பெற்றோர்களிலேயே தங்கி வாழ்கிறார்கள். வாழ்வார்கள். குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்த வேண்டும். இன்றைய பணத்தேவை ஒவ்வொரு பெற்றோர், ஏன் அனைவரையுமே காற்றாய் பறக்க வைக்கின்றது. இது தேவை. தேவைக்கப்பால் குழந்தைகளினுடைய கல்வியின் மீதான பார்வையை நீக்கி விடக்கூடாது.

பெற்றோர்கள் ஓய்வு நேரங்களை தோட்டம்,துரவு எனச் செலவழிப்பதில் கடத்தி விடுவார்கள். அன்பான உரையாடல் ஆதரவான வார்த்தைகள் கூட குழந்தைகளை நல்வழிப் படுத்தும். குழந்தைகள் பலர் பாடசாலை விட்டு வந்ததும் அவர்களிடம் "இன்று ஆசிரியர் என்ன சொல்லித்தந்தவர்" என அன்பாகக் கேட்டு அதனை மீண்டும் ஒருதடவை சொல்லிக் கொடுத்துப் பாருங்கள் பிள்ளைகளின் திறன் மூங்கிலின் வளர்ச்சியைவிட வேகமாக இருக்கும்.

குழந்தைகளை பயமுறுத்துவதென்பது பாரதூரமான விளைவுக்குள் தள்ளிவிடும் என உளவியல் சொல்கிறது. ஒரு குழந்தை புத்தகத்தையோ அல்லது கொப்பியையோ எடுத்தால்.... அது கிழிந்துவிடும் அழுக்கடைந்துவிடும் எனக்கருதி "அதை எடுக்காத வை" என அதட்டுகின்ற பெற்றோர்கள் இப்பொழுதும் எமது சமுதாயத்தில் இருக்கத் தான் செய்கிறார்கள். புத்தகங்கள், கொப்பிகள் எதுவாயினும் பழுதடைந்துவிடும் எனக்கருதினால் அது உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலேயே தான் இருக்க வேண்டும். இப்படி அதட்டுவதால் பிள்ளைகளுக்கு புத்தகத்தைத் தொடுவதோ அதனை ஆராய்வற்கு விரும்பாத ஒரு சூழலோ உருவாகும் அதைவிட குழுந்தைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையிலான இடைவெளி இப்படியான சம்பவங்களால் அதிகரிக்க வாய்ப்புண்டு. குழந்தைகளின் தரமான விருப்பு வெறுப்புக் களுக்காகவே பெற்றோர்கள் வாழவேண்டும். குழந்தைகளின் முன் உரையாடும்போது அறிவியல் ரீதியான அல்லது ஆக்கபூர்வமான சிந்தனைகளை வளர்க்கக்கூடிய கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுங்கள். உங்களுடைய குடும்பச் சண்டை கூட இவர்களுடைய வளர்ச்சியின்மைக்கு சாதகமாக அமைந்துவிடலாம். உங்களுடைய வன்மையான போக்கையும், உரையாடல்களையும் இயன்றவரை குழந்தைகளிடம் இருந்து தள்ளி அதாவது வேறு இடங்களில் வைத்துக்கொள்ளுங்கள்.

இன்று எமது பிரதேச பாடசாலைகளை (முன்பள்ளி) எடுத்து நோக்கினால் சாதாரணதரம் படித்த ஆசிரியர்களே குழந்தை களிற்கான கற்பித்தலை மேற்கொள்கின்றார்கள். இதற்குக் காரணம் உண்டு. படித்த பட்டதாரி ஆசிரியரை நியமித்தால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டிய தேவை உண்டு. அத்துடன் அவர்கள் வேறு சம்பளம் கூடிய வேலைகிடைத்தால் நழுவி விடுவார்கள் என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு சாதாரண தரம் படித்தவர்களையே ஆசிரியர்களாக அமர்த்தி விடுவார்கள். சாதாரண ஆசிரியரால் ஒரு குழந்தையின் மனநிலை யறிந்து அவர்களுடன் ஒன்றி கற்பிப்பதென்பது மிகவும் கடினம்.



ஆனால் மேலத்தேய நாடுகளைப் பொறுத்தவரை பட்டதாரி ஆசிரியர்கள் அல்லது ஓய்வு பெற்ற விரிவுரையாளர்களையே குழுந்தைகளுக்கான அடிப்படைக் கல்வி புகட்டலிற்கு நியமிப்பார்கள். ஏனெனில் ஓய்வு பெற்ற விரிவுரையாளர்கள் பல கற்பித்தல் களங்களிற்கு முகங் கொடுத்திருப்பார்கள் கொடுத்தும் இருக்கிறார்கள். அவர்களிற்குத்தான் புரியும் குழந்தைகளின் தர்க்க ரீதியான வினாக்களுக்கு எவ்வாறு விடை கொடுத்து விளங்க வைக்க முடியும் என்பது. இதே போன்றுதான் பட்டதாரி ஆசிரியர்களும். இப்படியான முறை எமது சமுதாயத்தில் விரையில் உருவாக்கப்பட வேண்டும்.

எல்லா ஆசிரியர்களையும் ஒப்பிடமுடியாது. ஒரு சிலரைப்பார்த்தால் சொல்வார்கள் "படிப்பிச்சா உயர்தர (A/L) மாணவர்களுக்குத்தான் படிப்பிக்கோணும்" இல்லாட்டித் தட்டிக்கழிப்பார்கள். இவர்கள் குறிப்பாக குழந்தைகளிற்கான கற்பித்தலை தரக்குறைவு என கருதுகிறார்கள். இப்படியான சூழலை அவதானிக்க முடிகின்றது. இக்குழந்தைகள் எல்லாம் யார்? எல்லோருமே எமது உடன் பிறப்புக்கள்தான். மனம் வைத்து ஆசிரியர்களாகிய நீங்கள் தான் செயற்படவேண்டும். ஓய்வு பெற்றால் என்ன? சம்பளம் குறைவு எனில் என்ன? இது கூட நாட்டுக்கான ஒரு சேவைதானே. பணம் தேவைதான் அது காலத்தின் நியதி. அதற்காக குழந்தைகளின் எதிர்காலத்தை பணத்திற்காக அழிக்க யாருமே முனையக்கூடாது.

பாலர் பாடசாலையிலேயே குழந்தைகளின் மாணவப்பருவம் ஆரம்பிக்கின்றது. அத்துடன் முடிந்துவிடவில்லை. பாலர்பாடசாலைகளுக்கு வெளியேயும் தொடரும். இங்கு தான் அவதானமாகவும் உன்னிப்புடனும் வழிநடாத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஏனெனில், அடிப்படைப்பழக்க வழக்கத்திலிருந்து, மற்றவர்களை மதித்துப் பண்பாக பேசுவது வரை குழந்தைகளிற்கு ஊட்டவேண்டிய இடம் இதுதான். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பர். இங்கு ஊட்டப்படும் நற் பழக்க வழக்கங்களே வளர்ந்த பின்னும் "பசுமரத்தாணி போல" பதிந்திருக்கும். இப்பருவத்தில் ஊட்டப்படும் கருத்துக்கள் அழிவை உண்டாக்குவதாகவோ அல்லது தீயவழி நோக்கியதாகவோ அமைந்துவிடின் இக்குழந்தைகளின் எதிர்கால நிலை என்ன? தலைகீழாக மாறிப்போன காலமிது. எமது மாணவ சமுதாயமும் சீரழிய வேண் டுமா? குழந்தைகளின் வாழ்க்கையும் பாதிப்படைய வேண்டுமா? இவைகளிலிருந்து பாதுகாக்க பெற்றோர்களாலும் ஆசிரியர் களாலுமே முடியும்.

வறுமை, போர் இவை சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் சக்திகளாகும். இதனால் இவர்களுடைய கல்வி பின்தள்ளப்பட்டிருக்கின்றது. இவற்றை தற்போது குழுந்தைகள் கடந்து கற்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், எவராயினும் சரி திணித் தல் ஊடான கற்றலை இயன்றவரை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குழுந்தைகளிற்கு நீங்கள் சொல்லிக்கொடுக்கும் போது விளங்கமறுத்தால் விட்டு விடுங்கள். பின்பு ஒரு நேரத்தை ஒதுக்கிச் சொல்லிக் கொடுங்கள். அதைவிட்டு "இஞ்சவா. இதுலஇரு. வாயில கையவை. நான் சொல்லுறதச் சொல்லு" என பயமுறுத்தி கடைசிவரையும் கற்பிக்கமுடியாது. அதிகாரத்தால் ஊட்டுவதைவிட அன்பால் ஊட்டிப்பாருங்கள் குழந்தை கிரகிக்கும் அளவு எவ்வளவு என்பதை உணர்வீர்கள்.

குழந்தைகளிற்கு ஆசிரியர்கள் கற்பிக்கும் போது சொற்களை கொப்பி களில் எழுதிக் கொடுக்கும் போது எழுத்துக் களைப் பொறி முறைக்கமைவாகஎழுதிக் கொடுப்பது இல்லை. அதாவது மிகக்குறைவு. இதனால் ஆசிரியருடைய எழுத்து வடிவமே மாணவர்களுக்கு பதிவாகிறது. இயன்றவரை பொறிமுறைக்கமைவாக எழுத குழந்தைகளை பழக்கவேண்டும். அப்படியென்றால் தான் அவர்களுடைய எழுத்தும் அழகு பெறும்.

குழந்தைகளின் ஆர்வத்திற்கும், முயற்சிக்கும் எவருமே ஒரு போதும் தடையாக இருக்கக்கூடாது. இருப்பதென்பது குழந்தைகளை உயிரோடு குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமனாகும். குழந்தைகளின் ஆசைகளை அடக்காதீர்கள். அவர்களுடைய உணர்வுகளையும், தன்மைகளையும் புரிந்து கொள்ளுங்கள். அவர்களையும் வாழவைக்க வேண்டும். அவர்களையும் சமூகத்தில் நற்பிரஜையாக மாற்ற வேண்டும். நாளைய நாட்டின் பொறுப்பு இவர்களது கைகளில்தான் கொடுக்கப்படும். அப் போது இவர்களைச் சரியாக வளர்த்தெடுத்திருக்காவிடின் நாட்டின் நிலைமையைப் பற்றிச் சிந்தியுங்கள். "நல்ல நல்ல குழந்தைகளை நம்பி இந்த நாடே இருக்கு" அதனால்

வி.தேவபாண

எப்படி வளர்க்கப்பட வேண்டுமென்பது உங்களுக்குப் புரியும்.

எல்லோரும் குழுந்தைகளாக இருந்தே பெரியவர் களானோம். குழுந்தைகளை எப்படி வழிநடத்த வேண்டும்? எப்படி வளர்க்க வேண்டும், எப்படி உருவாக்கவேண்டும் என அனுபவம் கற்றுத்தந்திருக்கும். புத்தகம் தூக்க வேண்டிய கைகளிற்குப் புத்தகத்தைத்தான் கொடுக்க வேண்டும். அனுபவம் வாய்ந்த ஆசான்களும், பெற்றோர்களும் இணைந்து செயற்படு வதன் மூலமே கு ழந்தைகளின் கல்வியை உயர்த்த முடியும். இவர்களை நாட்டின் நற் தலைவர்களாகவும் மாற்றமுடியும். இவர் களுக்கான சமுதாயத்தினுடைய பொறுப்புத் தேங்கிக் கிடக்கின்றது இத்தனைக்கும் ஆளுமைமிக்க, சமுதாயத்தி னுடைய பொறுப்புமிக்க, சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில், துவழுகின் றவர்களை தட்டிக் கொடுக்கும் அறிவை, மற்றவரை வழிப்படுத்தும் திறனை உடைய ஒருவராக உருவாக் கும் பொறுப்பு உங்களது கைகளில்தான் உள்ளது.

வன்னியைப் பொறுத்தவரை பல வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த சிறார்களின் கல்வியில் அக்கறை காட்டும் பொழுது ஏன் பொற்றோராலும், ஆசிரியர்களாலும் முடியாது. ஒருசிலர் திருந்தினால் போதாது அனைத்துப் பெற்றோர்களும், ஆசான்களும் இணைந்து செயற்பட்டாலே நல்ல சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்கமுடியும். இல்லாவிடின்....

---

## பன்முகம் -11

# ஒருபிடி மண்

**மாவீரன** நெப்போலியனைப் பற்றிப் பல கதைகள் உள்ளன. அவை பெரும் பாலும் செவி வழிவந்த கதைகள். அவற்றில் பல உண்மைச் சம்பவங்களாகவும் இருக்கலாம், அல்லது அவனைப் பெருமைப்படுத்துவதற்காக மிகைப்படுத்திக் கூறப்பட்டனவாகவும் இருக்கலாம்.

ஒரு முறை அவன் பிரிட்டிஷ் காரரால் கைது செய்யப்பட்டு எல்பா (ELBA) எனும் தீவில் சிறைவைக்கப்பட்டான். சில தினங்களில் நெப்போலியன் தனது படையினர் நடுவே வந்து நின்றான். "எப்படித் தப்பி வந்தீர்கள்?" என்று மற்றவர்கள் கேட்டதற்கு சிரித்தபடி அவனிடமிருந்து "எல்பா தீவை மாற்றி எழுதினேன், வந்துவிட்டேன்" என்ற பதில் வந்தது. இதன் பொருள் ஆங்கிலத்தில் உள்ள (ELBA) எனும் பெயரைபின் வளமிருந்து எழுதினால் ABLE(ஏபிள்) என்று வரும் 'ஏபிள்' என்பதின் பொருள் 'இயலும்' 'முடியும்' என்பனவாகும். இதனாற்தான் நெப்போலியன் முடியாது எனும் சொல்லை அகராதியில் இருந்து அகற்ற வேண்டும் என்பதைத் தன் வாழ்வில் இலட்சியமாகக் கொண்டிருந்தான்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தன்னைப் பெரும் சக்கரவர்த்தியாக்கிக் கொண்ட நெப்போலியனுக்கும் இயலாமை ஏற்பட்டது. இறுதிக்காலத்தில் அவன் கைது செய்யப்பட்டு சென் ஹெலனா தீவில் சிறைவைககப்பட்டு இறந்து போனான் என்பது வரலாறு.

நாடகத் துறையில் ஈடுபாடுடைய என்னுடைய நண்பர் ஒருவர் எழுபதுகளில்தான் அரங்கேற்ற நாடகம் ஒன்றில் நெப்போலியனின் இறுதிக் காலத்தின் சம்பவங்களை காட்சிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். அவருக்குக் கிடைத்த அந்தக் குறிப்பிட்ட தரவு உண்மையானதா அல்லது மிகைப்படுத்தப்பட்டதா என்பது அவருக்கே தெரியாது. ஆனால் மேடைக்கு நல்லவிடயம் என்பதால் அதையும் இணைத்துக் கொண்டார்.

சென்ற் ஹெலனாவில் நெப்போலியன் சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தில் அவனுக்குக் காவலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது பிரித்தானிய படைவீரரில் ஒரு வீரனாக பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஒருவனும் இருந்தான். என்னதான் பிரித்தானியப் படையின் ஊழியனாக இருந்த போதும் ஒரு காலத்தில் சக்கரவர்த்தியாகவும், பெரும் வீரனாகவும், பிரான்சு நாட்டுமக்களின் பேரபிமானத்துக்கு உரியவனாகவும் இருந்த நெப்போலியன் அன்று உடல் தளர்ந்து, நலிந்து, கண்பார்வை குறைந்து கைதியாக கேவலமான நிலையில் இருப்பது கண்டு மனம் நொந்து கொண்டிருந்தான்.

அவன் ஒரு முறை விடுமுறையில் பிரான்சுக்குப் போகும் முன்னர் நெப்போலியனை அணுகி தான் போய்வர இருப்பதைக்கூறி "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்கவும், நெப்போலியன் "நீ திரும்பி வரும்போது என் தாய் நாட்டின் மண்ணில் ஒரு பிடி மண்ணை எடுத்துக் கொண்டுவந்து தா" என்று கேட்கின்றான்.

அந்தப்படை வீரனும் பிரான்சு சென்று மீளும்போது ஒரு பிடிமண்ணை பிரான்சுபூமியில் இருந்து கொண்டுவந்து கொடுத்தான். நெப்போலியனும் தன் தாய்நாட்டின் ஒரு பிடி மண்ணை அடிக்கடி முத்தமிட்டபடி கையில் வைத்துக் கொண்டிருந்தான். இந்தச் செயலை பிரித்தானியத் தளபதியான வெலிங்டன் கண்டுவிட்டான். அந்த மண் பற்றிய விபரங்களை அறிந்து அங்கு வந்து சேர்ந்த மார்க்கத்தையும் அறிந்து கொண்டபின் அம்மண்ணை வீசி விடும்படி நெப்போலியனுக்கு உத்தரவிட்டான். அவனோ மறுத்தான், ஆத்திரம் கொண்ட வெலிங்டன் குதிரைச்சவுக்கால் நெப்போலியனை அடியோ அடியென்று அடித்தான். அப்படியிருந்தும் தன்தாயகத்தின் அந்த ஒரு பிடி மண்ணை அவன் கைவிடவில்லை. இறுதியில் அந்த மண்ணை அவன் கையில் இருந்து பறித்து தனது குதிரை கட்டப்பட்டிருந்த லாயத்தில் தூவும்படியும், தன் குதிரை அதனை மிதிக்கட்டும் எனவும் தன்னுடைய வீரர்களுக்குப் பணித்தானாம்.

இச்சம்பவம் உண்மை யோ புனைகதையோ மண்பற்றின் மகிமை சாற்றுகின்றது என்பது மட்டும் உண்மை. இச்சம்பவத்தை என நண்பர் கூறியபோது தொண்ணூறுகளின் முற்பகுதியில் மண்பற்றை மையக்கருவாகக் கொண்டு கே.ஆர். டேவிட் எழுதிய 'ஒருபிடி மண்' சிறுகதைதான் என் நினைவுக்கு வந்தது. உயிர் பிரிந்து விறைத்து விட்ட அவ்வுருவத்தின் கையினுள் இருந்து பிரித்துக் கொட்ட முடியாத அளவுக்கு இறுகப் பற்றி இருந்த ஒரு பிடி மண்ணும், மண்பற்றும் அக்கதையினால் அவருக்கு ஏற்பட்ட தாக்கங்களும் நினைவுக்கு வந்தன.

அதேவேளையில் பிரான்ஸ் நாட்டின் ஒரு பிடிமண்ணை தன் குதிரை லாயத்தில் கொட்டுவதின் மூலம் நெப்போலியன் புனிதமென்று போற்றிய மண்ணை குதிரையின் காலடிகளுக்குள்ளும், கழிவுகளுக் குள்ளும் போட்டு அசிங்கப்படுத்திய வெலிங்கடனின் செய்கை நாம் புனித பூமியாகக் கருதிய எமது மாவீரர் களின் விதைகுழிகளை இடித்து உழுத சிறிலங்கா இராணுவத்தின் இழி செயலையும் நினைவுக்குக் கொண்டு வந்தது.

நெப்போலியனின் மண்பற்றும், மாவீரமும், அம்மண்ணின் மகத்துவமும் மறக்கப்பட முடியாதவை. அதே போன்று எமது தாய்மண்ணாம் ஈழமும், அதற்காக வித்தானவர்களும் என்றைக்கும் மறக்கப்பட முடியாத வர்கள்.

நாவண்ணன்.

# தமிழ்த்தேசியத்தின் வெற்றிக்கு அடையாளமான விளையாட்டு விழா!

சங்கர்

**தமிழீழ** விளையாட்டுத்துறையினரால் நடாத்தப் பெற்ற இரண்டாவது பெருவிளையாட்டுப் போட்டி பெப்ரவரி 20 முதல் 25ம் திகதி வரை கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு அணிகள் இப் போட்டிகளில் பங்கு பற்றியமை குறிப் பிடத்தக்கது. உதை பந்தாட்டப் போட்டி யில் லெப். கேணல் விக்ரர் ஞாபகார்த்த கேடயத்தினையும், மென்பந்து கிரிக்கெட்போட்டியில் கேணல் சங்கர் ஞாப கார்த்தக் கேடயத்தினையும் திருமலை அணி சுவீகரித்தது. கரபந்தாட்டப் போட்டியில் மேஜர் அல்பேட் ஞாபகார்த்த கேடயத்தினையும், வலைபந் தாட்டப் போட்டியில் மேஜர் சோதியா ஞாபகார்த்த கேடயத்தினையும் யாழ். அணி சுவீகரித்தது. மென்பந்து கிரிக்கெட் காலையிலும், உதைபந்தாட்டம் பிற்பகலிலும், கரபந்தாட்டம் மற்றும் வலைபந்தாட்டம் என்பன இரவில் மின்னொளியிலும் நடைபெற்றன.

தமிழர், சிங்களவர், முஸ்லிம் கள் என மூன்று இன விளையாட்டு வீரர்களும் இதில் பங்குபற்றினர். குறிப்பாக சிறிலங்காப் பொலிசாரும் இதில் பங்குபற்றினர். வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசிலும், சான்றிதழும் வழங்கியதுடன் பதக்கம் அணிவிக்கும் நிகழ்வில் "கஜநாயக்கா" என பெயர் அறிவிக்கப்பட்டதும் குறிப்பிட்ட அப் பெயர்கொண்ட உதைபந்தாட்ட வீரரான சிறிலங்கா பொலிசார் ஒருவர் வந்தார், அவருக்கு விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் வீமன் பதக்கம் அணிவித்து பரிசில் வழங்கினார். மிக அபூர்வமான நிகழ்வுகளில் இதுவும் ஒன்று.

இது போலவே அம்பாறை மாவட்ட கரபந்தாட்ட தெரிவு அணியில் இடம் பெற்றிருந்த வீரர்கள் அனைவரும் சிறிலங்கா பொலிசார் ஆவர். அதுவும் அம்பாறை மாவட்டத்திலேயே பிறந்து வளர்ந்துவிட்ட ஒரு பரம்பரையினர் இவர்கள். இனப்பிரச்சினையில் குடியேற்றம் தொடர்பாக ஆராயுமிடத்து இவ்விடயம் குறித்தும் கவனத்திலெடுக்கவேண்டியுள்ளது.

இந்தப் பொலிசார் ஏற்கனவே சிங்கள தொடர்பூடகங்களால் ஏற்படுத்தப்பட்ட விடுதலைப்புலிகள் பற்றிய படிமத்துடனேயே இங்கு வந்தனர். அவலங்களின் பின்னரும் இங்குள்ள மக்களும் புலிகளும் எங்களோடு பழகிய முறை இனிமையான அனுபவமாக இருந்தது. இந்நிலையில் இவ்வளவு நல்ல இதயம் கொண்ட மக்களுக்கு எமது இனம் செய்த அழிவு களையிட்டு சிங்களவர் என்ற



கொக்காவிலில் படையினரின் சடலங்கள் எரியூட்டப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தும் பொலிசார்

சத் ஜெய ராணுவ நடவடிக்கையால் உருக்குலைந்து போயிருந்த கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஒரு பகுதியில் தங் கவைக்கப் பெற்றிருந்தனர். வரும் வழியிலேயே எம் மீது திணிக் கப்பட்ட போர் எமது வாழ்விடங்களை எவ்வாறு சிதைத்துள்ளது என்பதைப் பார்த்து விட்டு வந்த அவர்களுக்கு எமது கல்விச் சாலைகளின் தோற்றமும் யதார்த்தத்தைப் புலப்படுத்தின.

இந்த விளையாட்டு விழா தொடர்பான ஏற்பாடுகளும், விடுதலைப்புலிகளும் எமது மக்களும் அவர்களோடு பழகிய முறையும் ஏற்கெனவே சிங்கள ஊடகங்களால் புலிகள் பற்றியும், தமிழர்கள் பற்றியும் ஏற்படுத்தியிருந்த படிமங்களைத் தகர்த்தன.

"இங்கு வந்த நாம் போர் ஏற்படுத்தியுள்ள அவலங்களைக் கண்ணுற்றோர் ஒரேவேளை இவ்வளவு ரீதியில் வெட்கப் படுகிறோம்!" என மனந்திறந்து அங்கு வந்த விளையாட்டு அலுவலர் களிடம் தமது உணர்வுகளை வெளிப் படுத்தினர்,

இவர்கள் புறப்பட முன்னர் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தில் உரையாற்றிய பாப்பா இப் போட்டிகளை ஏற்படுத்திய நோக்கங்களை விபரித்தார். தொடர்ந்து "தென்னிலங்கையில் J.V.P ,சிஹல உறுமய போன்ற சக்திகள் தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கில் இதற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் எமது பகுதியில் மக்களும், புலிகளும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்'' என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

அத்துடன் ''ஓயாத அலைகள் -1'' நடவடிக்கை மூலம் நாம் முல்லைத் தீவு ராணுவ முகாமைத் தகர்த்த போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான சிப்பாய் கள் மற்றும் பொலிசாரின் சடலங்களில் சிலவற்றை மட்டுமே சந்திரிகா அரசு பொறுப்பேற்றது. ஏனையவற்றை ஏற்கமறுத்து விட்டது. யாருடைய நலனுக்காக இச்சிப்பாய்கள் பொலிசார் உயிரிழந்தனரோ அவர்களே இச் சடலங்களை ஏற்கவில்லை. இவ்வாறு அரசினால் பொறுப்பேற்க முடியாது கைவிடப்பட்ட சடலங்களை நாமும் போர் வீரர்கள் என்ற முறையில் பூரண இராணுவ மரியாதை களுடன் எரியூட்டினோம். அவ்வாறு எரியூட்டப்பட்ட இடத்தைக் கடந்து தான் இவ் விளையாட்டுப் போட்டிக்கு நீங்கள் வந்துள்ளீர்கள்'' என்று போரின்யதார்த்த நிலையை சுட்டிக் காட்டினார்.

இதனைத் தொடர்ந்து சில நிமிட நேரம் மௌனம் நிலவியது. அதன் பின்னர் பொலிசாரும் - இராணுவத்தினரும் எரியூட்டப்பட்ட இடத்தை தமக்கு காண்பிக்குமாறு அவர்கள் வேண்டினர். அவ்வாறே போகும் போது கொக்காவிலில் அந்த இடத்தைக் காண்பித்தபோது தமது உறவுகளுக்காக இருநிமிட நேரம் கண்ணீர் சிந்த மௌன அஞ்சலி செலுத்தினர். இழப்பு என்பது எல்லோரிடத்தும் ஒரே விதமானபாதிப்பைத் தானே ஏற்படுத்தும்?

இவ் விளையாட்டு விழாவிற்கென வருகை தந்திருந்த விளையாட்டு அலுவலர்கள், நடுவர்களுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பகலுணவு விருந்து வழங்கிக் கௌரவித்தார். அதன் பின்னர் நடைபெற்ற சந்திப்பில் "போரின் விளைவாக எமது சிறார்கள் உடல், உளரீதியாக பாதிப்புற்றிருக்கிறார்கள். அவர்களை இதிலிருந்து மீட்டு ஆரோக் கியமான சந்ததியினராக உருவாக்கவே இந்த விளையாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. சர்வதேச தரத்துக்கு எமது விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பணியில் நாம் அனை வரும் ஈடுபடுவோம். இதற்கு எமது தேசியத் தலைவரின் ஆசியும், உறு துணையும் உண்டு,

எமது பகுதியில் கல்விக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் விளையாட்டுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் விளையாட்டுப் போட்டி என்பது அனைவரையும் ஒன்று கூட வைக்கும் நிகழ்வு. எனவே விளையாட்டின் தரத்தை மேம்படுத்த நாம் அனைவரும் ஒன்று கூடிஉழைப்போம்'' எனக் குறிப்பிட்டார். அவரது உரை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது.

திரு. தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டது போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த விளையாட்டு விழா அமைந்திருந்தது... அத்துடன் தமிழீழத் தேசிய அணிகளுக்கான வீரர்களை தெரிவு செய்யும் முகமாக அமைந்திருந்தது.

இது தொடர்பாக இறுதிநாள் நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா குறிப்பிட்டது போன்று "இன்று அம்பாறை உட்பட்ட தமிழீழத்தின் எட்டு மாவட்ட அணிகளும் இப்போட்டிகளில் பங்கு பற்றியுள்ளன. இதில் அங்கம் வகிக்கும் சகல இன வீரர்களும் எமது தேசியக் கொடிக்கு முன்னால் அணிவகுத்து நின்றனர். இவர்கள் எமது தேசியத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இது எமது தேசியத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.''

இதை நிரூபிப்பது போன்றே பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட சகல இன வீரர்களின் உணர்வுகளும், செயற்பாடுகளும், அமைந்திருந்தன.




ஒரு சிறிது சொல்லி முழுவதும் விளங்கவைப்பதே, கவிஞனின் கலைத்திறன். - டபிள்யு வெஸ்ட் மோர்ஸ்டோரி




# யாருமே முன்வரவில்லை !

பொ. நந்தினி

## மார்ச் 08 உலக மகளிர் தினம்

மார்ச் 08 உலக மகளிர் தினமாக கொண்டாடப்படும் நாள். 1857 மார்ச் 08 அமெரிக்காவில் உள்ள புடவை ஆலைத் தொழிற்சாலையில் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் 10மணி நேர வேலை கேட்டும் „ஆணுக்கு சமமாக வழங்கப்படும் ஊதியம் தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து குரல் கொடுத்த நாளே இத்தினமாகும்.

இப்பிரகடனமானது ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப் பட்டு வருகின்றது என்பதைவிட குரல் கொடுக்கப்பட்டு வருகிறது. குரல் கொடுப்பின் மூலம் மாற்றங்கள் தோன்றுகின்றனவா என்றால் இன்னும் நூறோ, இருநூறோ ஆண்டுகள் கடந்து தான் சிந்திக்க வேண்டும்.

சரி மார்ச் 08 நானும் போவம் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறதாம் என்று வெளிக்கிட பரபரப்பான செய்தி வந்தது.

சந்திராக்காவின் கணவர் செல்லையாண்ணை இறந்து விட்டாராம் என்று. என்ன செய்வது கூட்டத்துக்குப் போவதை விட கட்டாயம் சாவீட்டுக்குத் தானே போக வேணும் என வெளிக்கிட்டுப் போனேன்.

தகரப் பந்தல் போடப்பட்டு சாவீட்டிற்கான களைகட்டியிருந்தது. மேளச் சத்தம் ஒருபுறம் வருபவர்களை வரவேற்கிறது. சந்திராக்கா, செல்லையாண்ணை வேலை செய்யிற இடத்திலிருந்து அவர்களின் மேலதிகாரிகள், அவர்களின் கீழ் வேலை செய்பவர்கள் எல்லாரும் வந்திருந்தனர்.

ஆண்கள் போடப்பட்ட கதிரைகளில் இருந்து கொண்டு தங்கள் தங்களுக்குள் கதைத்துக் கொள்கிறார்கள். இடைக்கிடை "அநியாயமாகச் செல்லயன் செத்துப் போனான். சாகிற வயதே அவனுக்கு. வருத்தங்கள் எப்படியப்பா வருகுது" என்று அங்கலாய்க்கவும் தவறவில்லை. வெத்திலைத் தட்டம், சுருட்டு, பீடி எல்லாம் கொடுக்கப்படுகின்றது.

பெண்கள் கூட்டமாகவும், தனியாகவும், வேலை செய்பவர்களாகவும் வந்து கொண்டிருந்தனர். உறவுகள் சந்திராக்காவைக் கட்டிப்பிடித்து அழும் காட்சியும், தெரிந்தவர்கள் ஒப்புக்காகவும், சம்பிரதாயத்துக்காகவும் அழும் காட்சியும் நீளுகிறது...

பரிமளமக்கா, சுந்தரியக்காவைப் பார்த்துச் சொன்னா "என்ன செய்யிறது. செல்லாயண்ணையை விதி இப்படிக் கொண்டு போகுமெண்டு. எண்டாலும் சந்திராக்கா வேலை செய்யிறா சமாளிப்பாதானே" எண்டா பரிமளமக்கா.

அழுகை, ஒப்பாரி தொடர்ந்து கொண்டேயிருக்க...

"செல்லையன்ர மோன் கொழும்பில இருக்கிறானெல்ல, அறிவிச்சனீங்களே" மூத்தியண்ணைட்டக் கேட்டார் சுந்தரமண்ண.

"ஓம்...ஓம்... அறிவிச் சனங்கள் பின்நேரத்திற்கிடையில வாறானாம். எல்லா ஒழுங்கையும் செய்யச் சொன்னவன் என்றார் மூத்தியண்ண.

வெளியில தமயன் ஒருதர் இருக்கிறார் அவர் இன்னும் வரயில்ல என்று ஒரு குரல் வந்தது. "சீ...சீ.. இனிப்பாக்கேலாது மகன் வந்திட்டான்ஆயத்தப் படுத்துவம்." என்றார் மூத்தியண்ண.

"சரி..சரி.. அழுதது காணும் அவாவைக் கொண்டே ஆயத்தப் படுத்துங்கோ" தலைமை தாங்கிக கொண்டிருந்த மூத்தியண்ண குரல் கொடுத்தார். கூடி நின்றவர்கள் சந்திராக்காவை கட்டிப்பிடித்து அழுதனர்.

நாலைந்து பெண்களால் சந்திராக்கா மணவறைக்கு அழைத்



துச் செல்லப்படும் பெண் போல அழைத்துச்செல்லப்பட்டு குளிப் பாட்டி நல்ல சேலை கட்டி மங்கலத்திற்காக வல்ல அமங்கலத்திற்காக செல்லயாண்ணையின் உடல்வைக்கப்பட்டிருந்த இடத்துக்குக் கூட்டி வரப் படுகிறா.

செல்லயாண்ணையின் உடலும் மாப்பிள்ளைக் கோலத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சந்திராக்கா பலி பீடத்திற்கு போகும் ஆடு போல மௌனமாகக் கண்ணீர் வடித்தபடி வந்து நிற்க அங்கே ஒரு நிசப்தம் தோன்றுகிறது.

கூறைச் சீலையைக் கொண்டு வாங்கோ என்றதும் பெண்களில் ஒருவர் ஓடிப்போய் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்த கூறைச் சேலையை எடுத்துக் கொண்டு வந்து இந்தாங்கோ என்றா. அதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் அழுது கொண்டு சந்திராக்காவைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

நெற்றியில் அழகான பெரிய குங்குமப் பொட்டு வைக்கப்பட்டு, கழுத்திலும் பூமாலை போடப்பட்டு, தாலிக் கொடியையும் வெளியில் எடுத்து விடப்பட்டு சந்திராக்காவை தயார் நிலையில் நிறுத்தியிருந்தனர்.

"சரி பாத்துக் கொண்டு நிக்காதையுங்கோ நேரம் போகுது செல்லையன்ர கையைத் தூக்கி அவவின்ர நெத்தியில இருக்கிற பொட்டை அழியுங்கோவன் சபையில் நின்ற மூத்தியண்ணையின் அடுத்த கட்டளை பிறக்கிறது.

பக்கத்தில நின்ற பவளமக்காவும் இதனை அனுபவித்திருந்தவாதானே செல்லயாண்ணையின்ர கையைத்தூக்கி சந்திராக்கான்ர நெத்தியில இருந்த பொட்டை அழித்து விட்டு, கழுத்திலிருந்த பூமாலையையும் கழற்றிக் கொடுத்து விட்டு தாலிக் கொடியையும் கழற்றிக் கையில்க் கொடுத்து போடச் செய்தா.

மெய் உருக்கும் அந்தக் கணம் கூடிநின்றோர் அனைவரினது கண்களிலிருந்தும் கண்ணீரை வழிய விடுகிறதேயொழிய அதனைத் தடுத்து நிறுத்த யாருமே முன்வரவில்லை. ஏனெனில் அது கணவன் கொண்டு வந்த சொத்தாம், அதனை அவரோடயே கொடுத்து விட வேணுமாம் என்ற சம்பிரதாயத்துள் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அதில் சந்திராக்காவும் விதிவிலக்கல்ல.

வந்தவர்கள் தங்கள் கடமை முடிந்து விட்டது எனக் கலைந்து செல்ல சந்திராக்கா பொட்டிழந்து , பூவிழந்து , தாலியிழந்து அமங்கலப் பட்டம் கொடுக்கப்பட்டு தனிமையாக...

இச்செயலை படித்து வேலைபார்க்கும் சந்திராக்கா கூட இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று எண்ணியிருந்தாலும் சமூகம் என்னும் மாயத்திரைக்குப் பயந்து பேசா மடந்தையாக நின்றிருந்தார் என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

நானும் போவம் எண்டு வெளியில வந்தால் சந்தியில் மார்ச் 08 உலக மகளிர் தினம் என்ற பதாதை தொங்கிக் கொண்டிருக்க, பெண் விடுதலை பற்றி ஒலி பெருக்கியிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

பொட்டு,பூ, தாலி இழப்புகள் இன்று சந்தி ராக்காவோடு முடியப் போவதில்லை. இன்றோ, நாளையோ முடிந்து விடக் கூடியதுமல்ல. குரல்களை கொடுத்துக் கொடுத்து ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் போதுதான் முடியும்.

இச்சம்பிரதாயங்கள் தமிழீழத்திலிருந்து சிறிது சிறிதாக களையப்பட்டு ஒட்டுமொத்தப் பெண்களுக்கும் வழியமைத்துக் கொடுக்கும் வரை குரல் கொடுப்புகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

பிறப்பாலும் நற்கவிஞன் ஆகலாம்; பயிற்சியாலும் நற்கவிஞன் ஆகலாம். - பென் ஜான்ஸன்

# அமெரிக்கா - ஈராக் முற்றிவரும் தலைவலி

இமையவன்



ஈராக்கின் கைவசமுள்ள பேரழிவு ஆயுதங்களைக்களைவதற்கான முன்னெடுப்பே ஐ.நா பாதுகாப்பு சபையின் 1441 எண்கொண்ட தீர்மானமாகும். இத்தீர்மானத்திற்கு மேலதிகமாக, இன்னுமொரு நகல் பிரேரணை பிரிட்டனாலும் ஸ்பெயினாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு சபையின் 1441 தீர்மானத்திற்கமைவாக, ஈராக் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, ஆயுதங்களைக்களைய் முன்வராமையால், ஈராக்கின் மீதான நேரடி போர் நடவடிக்கை மூலமாக ஆயுதக் களைவை நிறைவேற்றுவதற்கான ஐ.நா பாதுகாப்பு சபையின் அங்கீகாரம் பெறுவதற்காகவே இந்நகல் பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

ஆனால், பாதுகாப்புச் சபையின் 15 உறுப்புநாடுகளில், குறைந்தபட்ச பெரும்பான்மையாகிய 9 நாடுகளின் ஏற்பை இப்பிரேரணை பெறுமா என்பது கேள்விக்குரியதே. மேலும் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளில் (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ரசியா,சீனா) ரசியா, சீனா,பிரான்சு ஆகியவற்றின் வெட்டு வாக்களிப்பை (VETO) இப்பிரேரணை எதிர்கொள்ள வேண்டியுமுள்ளது.

இப்பிரேரணை இரு நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1) ஈராக் மீதான ஆக்கிரமிப்பிற்கு அங்கீகாரம் பெறுதல்.

2) போரின் பின்னரான அமெரிக்க சார்பு ஈராக்கின் புனர்நிர்மாணப பணிகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பைப் பெற, இத்தீர்மானம் மூலம் வழிசமைத்தல். ஈராக் மீதான தாக்குதலுக்கு முழுமையான எதிர்ப்பைக் காட்டும் நாடுகளில் சீனா, ரசியா, பிரான்சு, ஜேர்மனி, ஈரான், சிரியா, மலேசியா முன்வரிசையில் உள்ளன. ஆயுதக் கண்காணிப்புக்குழுவின் செயற்படுகாலம் நீடிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஈராக் மீதான தாக்குதல் என்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்கின்றன இந்நாடுகள். சமீபத்தில் அணிசேரா நாடுகளின் 13வது உச்சி மாநாடு கோலாலம்பூரில் இடம் பெற்றபோது தற்போதைய அணிசேரா நாடுகளின் தலைவராகிய மலேசியப் பிரதமரது சீற்றம் மிகுந்த உரை அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு பெரும் சாடலாகவிருந்தது. எந்த நாடுமே முழு உலகின் போலிஸ்காரனாக இருக்க முடியாது என்ற வகையில் காட்டமான கருத்தை அவர் வெளியிட்டிருந்தார். உலகிலுள்ள 195 நாடுகளில் ஏறக்குறைய 116 நாடுகள் அணிசேரா நாடுகள் அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ளன. போரைத் தவிர்க்கக் கோரும் இம் மாநாட்டுத் தீர்மானம் பலவீனமானது தான் என்றாலும் அமெரிக்க, பிரிட்டன் கூட்டு, தனிக்காட்டு ராஜாவாக செயற்படுவதற்கு அனுமதி கிடையாது எனப் பிட்டுவைக்கிறது.

1441 தீர்மானத்திற்கமைவாக ஈராக்கின், அல்-சமுத் 2வகையிலான 120 ஏவுகணைகளை ஈராக் அழித்துக் கொள்ள வேண்டும் என முதன்மை ஆயுதக் கண்காணிப்பாளர் பிளிக்ஸ் "கட்டளை"யிட்டிருந்தார். அதற்கான காலக்கெடுவை 28-02-2003 என விதித்திருந்தார். சதாம் தனது வழமையான பாணியிலேயே இவ்விவகாரத்தைக் கையாண்டார். சதாம் எப்போதும் பதட்ட நிலையை உச்சகட்டத்தின் விளிம்புவரை (BRINKMAN SHIP) இட்டுச் செல்வதுண்டு. இது ஒரு வித உத்தியாகும். ஈராக் மீதான தாக்குதலைக் கண்டிக்கும் எதிர்ப்பினை அனைத்துலக ரீதியிலும் வெளிக்காட்டுவதற்கான கால அவகாசத்தை இவ்வுத்தி அவருக்குக் கொடுத்தது. அவரது எண்ணம் ஈடேறியது என்னவோ உண்மைதான். 27-02-2003 வரை மௌனித்த சதாம், தன்னிடமுள்ள 150 கிலோ மீற்றருக்கு அதிகமான தொலைவு தாக்குதிறன் கொண்ட ஏவுகணைகளை அழிப்பதற்கு கொள்கையளவில் ஒப்புக்கொண்டார். (ஐ.நா.சபையின் 1990ம் ஆண்டுத் தீர்மானமொன்று ஈராக்கின் ஏவுகணைகள் 150 கிலோ மீற்றருக்கு உட்பட்ட வீச்சுத்திறன் கொண்டதாக அமையவேண்டும் என வலியுறுத்தியது) சதாமின் ஆலோசகர் ஜெனரல் அமிர் அல் சாதியினால் அளிக்கப்பட்ட இக் ''கொள்கையளவிலான'' ஒப்புதலுக்கு பதிலளித்த பிளிக்ஸ் - "கொள்கையளவு" என்பதற்கு விளக்கம் கோரினார். வேறு வார்த்தைகளில் கூறுவதாகில், ஏவுகணைகள் முழுமையாக அழிக்கப்படுதலையே, அதாவது ஏவுகணைப் பொறியமைவு, வெடிபொருள் மற்றும் துணை உபகரணங்களின் முற்றான அழிப்பையே பிளிக்ஸ் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதப்படுகிறது. பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் டொமினிக் த விலேப்பின்; ஈராக்கின் ஒப்புதல், ஐ.நா.வின் ஆயுதக் கண்காணிப்பு சில நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்கிறார். இதனை முற்றாக நிராகரித்த வெள்ளை மாளிகை ஊடகப்பேச்சாளர், ஏற்கனவே அமெரிக்க அதிபர் எதிர்வு கூறியிருந்த ஈராக்கின் தந்திரமே இது எனக்குறிப்பிட்டு, குறைந்தபட்சமாக ஒரு சில ஏவுகணை களையாகுதல் ஈராக் அழிக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

இவ்விவகாரத்தில் முக்கியத்துவம் பெறுவது என்னவெனில், ஈரானின் ஷா மன்னர் ஆட்சி, புரட்சிகர எழுச்சியின் மூலம் கவிழ்க்கப்பட்டதன் பின்னர், ஈரானின் மீதான மேற்குலக ஆசிகளுடனான ஈராக்கிய தாக்குதலின் போது மேற்குலகத்தினால் வழங்கப்பட்ட ஏவுகணைகள் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலேயே இந்த அல் சமுத் ஏவுகணைகள் ஈராக்கினால் உருவாக்கப்பட்டிருந்தன. 1995ஆம் ஆண்டில், ஈராக்கிய பேரழிவு ஆயுதத்தயாரிப்புப் பற்றிய தகவல்கள் வெளிவந்தன. சதாம் குசெயினின் மகள் வழி மருமகன் கமல் அல்மஜீத், புலனாய்வுப் பொறுப்பாளர்களில் ஒருவரான வாபிக் அல் சமராய், முன்னணி அறிவியலாளர் கிதிர்ஹம்சா ஆகிய சதாம் அதிருப்தியாளர்கள் ஈராக்கிலிருந்து வெளியேறி, இத்தகவல்களைத் தந்தனர்.

ஈராக் நெருக்கடியின் பக்க விளைவுகள் ஏற்கனவே வெளிப்படுகின்றன: அரபு நாடுகளுக்கு சில சங்கடங்கள் உருவாகியுள்ளன. பயங்கரவாதத்துக்கு உதவுபவர் என வெள்ளை மாளிகையினால் குறிப்பிடப்படும் சிரியா, அயல்நாடு என்ற வகையில், தனது வாசலில் ஒரு போர் மூளுவதை விரும்வில்லை. எனவே போரை அது எதிர்க்கிறது. ஈராக்கின் முன்னாள் எதிரியாகிய ஈரான் இசுலாமிய, அராபிய பொதுமை காரணமாக ஈராக்கிற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டிய நிலைமையில் உள்ளது. கொதிநிலையிலுள்ள பிராந்திய அரசியலில் அமெரிக்கத் தலையீட்டில் குறிப்பிடத்தக்க படிமுறை வளர்ச்சியாகவே இதனை சில அரபு நாடுகள் கருதுகின்றன. பாரம்பரியமாக அமெரிக்காவை ஆதரித்த அரபு நாடுகள் தனது இஸ்லாமிய மக்களது கோபத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் பொருண்மிய சீர்குலைவுக்கும் அரபுநாடுகள் முகங்கொடுக்க வேண்டிய நிலைப்பாடும் எழுந்துள்ளது. சென்ற வாரம் பெற்றோலியத்தின் பீப்பாய் ஒன்றின் விலை 40 அ.மெ.டொலர்களாக உயர்ந்து விட்டது. இனியும் அதிகரிக்கும் வாய்ப்பும் உண்டு. தங்கத்தின் விலை அதிகரிப்பதோடு, உலகளாவிய பங்குச் சந்தையின் சரிவு ஆரம்பித்து விட்டது. மூலதன சந்தையின் முதலீட்டாளர்கள் தயங்குகின்றனர்.

ஈராக்கின் வடபகுதியில் அமெரிக்கத் தளத்தையும், போர் வீரர்களையும் கொண்டிருந்த துருக்கியின் பாராளுமன்றம், துருக்கியிலிருந்து, ஈராக் மீதான தாக்குதலுக்கு அனுமதியளிக்கவில்லை. நட்டஈடாக மிகப் பெருமளவில் பணந்தர அமெரிக்கா முன்வந்த போதும் துருக்கி இணங்கவில்லை. இந்த நெருக்கடியின் போது குர்திஷ் விடுதலை அமைப்பு உற்சாகம் பெற்று மீண்டும் தலையெடுப்பதை துருக்கி விரும்பவில்லை. ஈராக்கின் வட எல்லையூடாக குர்திஷ் பிராந்தியங்களுக்குள் துருக்கிய துருப்புகள் எல்லைகடந்து சென்று விட்டதாகத் தகவல்கள் வருகின்றன. குர்திஷ். விடுதலை அமைப்பின் எழுச்சி, ஒரே எல்லையைக் கொண்ட துருக்கிய குர்திஷ் மக்களுக்கும் ஊக்குவிப்பதாக அமைந்துவிடும் எனத் துருக்கி எண்ணுகிறது. குர்திஷ் விடுதலை அமைப்புகள் எதிரியின் எதிரி நண்பன் என்ற வகையில் அமெரிக்காவின் வருகையை நாடுகின்றன.

அமெரிக்க - ஈராக் பிணக்கினை வெறுமனே பிராந்திய ஆதிக்கப் போட்டியாகக் கருத முடியுமா? அல்லது அனைத்துலகத்திலுமே வியாபித்து வரும் பொதுமை முரண்பாட்டின் புறத்தோற்றமா? அலச வேண்டிய விடயம்தான் இது.

பெற்றோலிய எரிபொருள் உற்பத்தி, விநியோகம், ஆகிய தொழில் துறைகளில் உலகின் பெரும் மூலதனத்தைக் கொண்ட பல்தேசிய நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. இது தவிர பெற்றோலியம் சார்ந்த துணைத் தொழிற்துறைகளு முண்டு. இன்றைய மனிதனின் சமூக வாழ்வில் பெற்றோலியம் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் மிகப்பாரிய பங்கு வகிக்கின்றன.

தேசிய எல்லைகளைக் கடந்து நிற்கும் இப்பாரிய பெற்றோலிய நிறுவனங்களது நலன் பேணப்பட வேண்டும் என் பதில் அனைத்துலக முதலாளியத்தின் தனிப்பெருந் தலைவனாகிய அமெரிக்கா தீவிர கவனமெடுக்கிறது. அமெரிக்க ஆட்சி முறைமை மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் இந்நிறுவனங்களின் நலன் பேணுவதாக அமைந்துள்ளது. கொள்கை வகுத்தலும், நடைமுறைப்படுத்தலும் கூட பல்தேசிய நிறுவனங்களது நலன் சார்ந்ததாகவே உள்ளது. இதற்கமையவே "சனநாயகமும் "மனித உரிமைகளும்" மறுசீரமைக்கப்படுகின்றன. வேறுவார்த்தைகளில் கூறுவதானால், உலகப் பொதுவான அரசியல், சமூக, பொருண்மிய, பண்பாட்டு கட்டமைப்பின் அவசியமெழுந்துள்ளது. தேசிய "எல்லைகள்" தகர்க்கப்பட்டு, நவீன ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்ய வல்ல, கூறுபாடற்ற, அகண்ட சுதந்திரப் பொருண்மியம் உருவாக்கப்பட வேண்டும் - இதுவே இன்றைய சர்வதேசியம். தத்தமது தேசிய அல்லது பிராந்திய நலன்கள் பேணப்பட வேண்டும் எனக் கருதிச் செயற்படும் நாடுகள் பெருஞ்சிக்கல்களில் மாட்டுப்படுகின்றன. மூலதனத்தின் பெரும் பாச்சலூடாகவே சமூக மேம்பாடு எய்தப்பட வேண்டும் என்ற கருத்தோட்டமும் வளர்ந்து வருகிறது.

நாடுகளின் உள்விவகாரங்களில் ஏற்படும் பிணக்குகளில் தீர்வு காணுவதற்கும், பிராந்தியங்களில் ஏற்படும் மோதல்களுக்குமான தீர்வுப் போக்குகளிலும், "சனநாயகத்தையும், மனித உரிமைகளையும் பேணுதல்." என்ற விடயம் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தேசிய மற்றும் பிராந்திய நலன்கள் புறந்தள்ளப்பட்டு, எவ்வகைக் கட்டுப்பாடுகளுமற்ற சுதந்திரப் பொருண்மியத்தின் மேலோங்குகைக்கு, ஒரு "புதிய உலக ஒழுங்கு" அவசியம். இந்நியதியின் பாற்பட்ட மறுசீரமைப்பிற்குள்ளாக மறுக்கும் அல்லது தயங்கும் நாடுகளும், அவற்றின் மக்களும் "நரகத்தில் இடர்படக்கடவர்." இதுவே இன்றைய நிலைப்பாடு.

அண்மையில் அமெரிக்க அதிபர், அமெரிக்காவிற்கான சிறிலங்காவின் புதிய தூதுவர் டி.ஆர். சுபசிங்கவைச் சந்தித்த போது வெளியிட்ட கருத்துகள், இன்றைய அனைத்துலக அரசியலைத் தெளிவுபடுத்துகிறது.

"அமெரிக்கா உங்களது நாட்டில் இடம் பெறும் சமாதானத்திற்கான நடைமுறையைக் கூர்ந்து கவனித்து வருகிறது. மிகவும் கஷ்டமான காலங்களில் நாம் வாழ்கிறோம். ஆனால் குழப்பமுற்ற இவ்வுலகில் சிறிலங்கா நன்மையை நாடும் தீவாக உயர்ந்து நிற்கிறது. நமது இரு நாடுகளும் பயங்கரவாதத்தின் நேரடி அனுபவத்தைக் கண்டமை கவலைக்குரியதுவே. பயங்கரவாதத்திற்கெதிரான ஊக்கமளிக்கும் நிலைப்பாட்டினை சிறிலங்கா கொண்டுள்ளமையும், ஈராக் நெருக்கடியில் சிறிலங்கா கொண்டுள்ள ஆதரவுப்பாங்கினையும் அமெரிக்கா பாராட்டுகிறது."

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



ச. வக்ஷன்



புதுக்குடியிருப்பில் வசிக்கும்
சந்திரகுமார் மேரி அனிற்றா தம்பதிகளின்
செல்வப்புதல்வன் வக்ஷன் தனது முதலாவது பிறந்தநாளை
07. 03. 2003 அன்று தனது இல்லத்தில் மிகச் சிறப்பாக
கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா,
அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார்,மாமாமார்
அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார்
சித்தப்பாமார்,சித்திமார் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம்
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்
க.சந்திரகுமார்(சிவா)
புதுக்குடியிருப்பு
(சி-7803)

# நேர்நோக்கு

## நடுநிலை தவறும் போக்கு

நெடுந்தீவில் பாரிய கடற்படை முகாமொன்றை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த முகாமை அமைக்கும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கையானது சிறிலங்கா சனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமை நிறுவனங்கள் என்பவற்றுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் தீவிரமடைந்திருந்த வேளையில் இத்தீவில் நிலைகொண்டு மக்களைத் துன்புறுத்தி வந்த ஈ.பி.டி.பி.யினருக்கு எதிராக மக்கள் சமாதான காலத்தில் போர்க்கொடி ஏந்தினர். இதனால் அவர்கள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஆனால் அவர்களின் 'சனநாயகச் செயற்பாடுகளுக்கு' உதவி அவர்களை அங்கு நிலை நிறுத்த வேண்டும் என்பதில் ஏதோ ஒரு சக்தி உறுதியும் அக்கறையும் கொண்டிருப்பதை நெடுந்தீவில் நடைபெறும் அண்மைக் காலச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

அதாவது, இவர்கள் அங்கு நிலை நிறுத்தப்படுவதால் அச்சக்திக்கு நேரடி இலாபம் கிடைக்கிறதோ இல்லையோ, இதன் மூலம் பாரிய யுத்தநிறுத்த மீறல் ஒன்றை மேற்கொள்வதில் அச்சக்தி உறுதியாக இருக்கிறது. ஈ.பி.டி.பி.யினர் போன்ற குழுக்கள் யுத்த காலத்தில் உதவியது போன்று சமாதான காலத்திலும் அதில் குழறுபடியை ஏற்படுத்த உதவக் கூடியவையாகும். எனவே அதனைப் பயன்படுத்தி அவர்களுக்கு பாதுகாப்பு என்ற பேரில் அங்கு தரையிறக்கப்பட்ட கடற்படை பிரதேசசபைக் கட்டடத்தையும் அதனை அண்டிய. கட்டடங்களையும் ஆக்கிரமித்துள்ளது. இது பாரிய ஒரு யுத்தநிறுத்த மீறலாகும். அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் பொதுக்கட்டடங்களில் நிலை கொண்டுள்ள படையினர் வெளியேற காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை அப்பட்டமாக மீறும் வகையில் புதிதாக பொதுக் கட்டடம் ஒன்று படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தமானது புதிய படைமுகாம் ஒன்று அமைக்கப்படுவதனையும் தடுக்கிறது. அதுவும் மீறப்பட்டிருக்கிறது.

மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் நோக்குடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது நெடுந்தீவு மக்களைப் பொறுத்தவரை நெருக்கடியைக் கொடுக்கும் ஒன்றாக மாறியுள்ளது. அதாவது முன்னர் ஈ.பி.டி.பி.யினருடைய கெடுபிடிகளை மட்டும் சந்தித்த மக்கள் இப்போது கடற்படையினருக்கும் அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமக்கு ஏற்பட்ட அவல நிலையை மூன்று மாதங்களுக்கு மேலான தொடர் போராட்டம் மூலம் உலகிற்கே இம்மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அது உலகின் கண்ணில்பட்டதாகத் தெரியவில்லை.

அரசியல் கட்சிகள் அம் மக்களின் பால் அனுதாபம் கொண்டவை போல் காட்டிக் கொண்டதுடன் நிறுத்திக் கொண்டன. அமைச்சர்கள் அம்மக்களைப் பார்த்து போலி வாக்குறுதிகளை வீசிவிட்டு வெளியேறியுள்ளனர். அண்மையில் இன்றைய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவராகிய மிலிந்த மொறகொட இம்மக்களிடம் இப்படைமுகாம் கடந்த மாத இறுதிக்குள் அகற்றப்படும் என்று கூறிச்சென்றார்.

ஆனால் அவர் போனபின் தான் படைமுகாம் விஸ்தரிப்புத் தொடர்பான செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

அரசியல் வாதிகள்தான் அப்படியென்றால் மனித உரிமை அமைப்புக்களும் வழமையான முரண்பாடான போக்கையே கடைப்பிடிக்கின்றன. மக்களுக்கு எதிரான வகையில் அவர்களின் மனித உரிமைகளை மீறும் செயற்பாட்டில் ஈடுபடும் அரசாங்கம் படைகளைத் தட்டிக்கேட்க அவை தயங்குகின்றன.

இவை எல்லாவற்றையும் விட அம்மக்களை விரக்திக்குள்ளாக்கும் விடயம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாரா முகமாகும். இரண்டு, படையினரின் விடையத்தில் கடும் முயற்சியை மேற்கொள்ளும் கண்காணிப்புக் குழுவினரால் ஒரு பிரதேசத்தில் வாழும் ஆயிரக் கணக்கான மக்கள் விடயத்தில் மேற்கொள்ளப்படும் போர்நிறுத்த மீறல்கள் கவனிப்பின்றி விடப்பட்டிருப்பது பெரும் விரக்தியையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தும் விடயமாகும்.

அதாவது யுத்த நிறுத்தத்தை மீறிய இராணுவச் சிப்பாயிலும் பொலிஸ் உத்தியோகத்தரிலும் காட்டும் அக்கறையிலும் கரிசனையிலும் சிறிதளவாவது தம் மீது கண்காணிப்புக்குழுவினர் காட்டவில்லை என்பது ஒருபுறம். அத்துடன் பாரிய யுத்த நிறுத்த மீறலை தடுக்க அவர்களால் முடியவில்லை என்பது மறுபுறமுமாக அம்மக்கள் விரக்தியடைந்துள்ளனர். அதாவது நடுநிலையாளர்கள் என்ற பெயருக் கேற்ப நடந்து கொள்ளாவிடின் அந்தப் பெயருக்கே அர்த்தமில்லை என்பதே இம்மக்களின் கருத்தாக இருக்கிறது.

வேலவன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தம் கொடுக்கப்பட்டது...

இதெல்லாம்.... இவை போன்ற எத்தனையோ அவமதிப்பு, மிரட்டல், நிராகரிப்பு எல்லாம் இதே சந்திரிகாவால் இந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் சமாதானம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கப்பட்டது.

ஆனாலும் அவர் சமாதான சங்கீதத்தையும் தனது கரகரத்த குரலில் அவ்வப்போது ஆலாபனை செய்து கொண்டும் தான் இருந்தார்.

கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும் அவருள் இருக்கும் இனவாதச் சாத்தானின் சுபாவமாகிவிட்டது.

கடந்த காலத் தலைமைகள் விட்டதவறுகள் தான் இத்தனை அவலங்கள், துயரங்கள், சோகங்கள், பின்டைவுகள் அனைத்திற்குமே காரணமென்றால்... அந்தத் தலைமைகள் கடைப்பிடித்த அரசியல் நிர்வாகக் கோட்பாடுகளை - நிறைவேற்று அதிகார நிர்வாக முறைமையை, இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளை, இராணுவரீதியிலான அணுகுமுறைகளை உடைத்தெறியும் அதிகாரவலுவை முழுமையாக்க கொண்டுள்ளவரான சந்திரிகா தனது வாக்குச் சுத்தத்தை, மனத் தூய்மையை, சனநாயக அரசியலில் தனக்குள்ள பற்றார்வத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தி நிரூபிக்க அவற்றையெல்லாம் தகர்த் தெறிய முன்வரலாமே.

வரமாட்டார்... வரவே மாட்டார்

அந்த அதிகாரவலு தான் அவரின் ஒரேபலம்- இனவாதிகளின் ஒரேபாதுகாப்பு அதனை இழக்க, அந்த சர்வாதிகாரக் கதிரையை தூக்கியெறியக் கூடிய ஆத்ம பலம் இந்த பௌத்த சிங்கள அரசியல் தலைமைகளுக்கு என்றுமே இருந்ததில்லை. அதுவும் பண்டாரநாயக்கா பரம்பரையினருக்கு என்றுமே இருக்கப் போவதுமில்லை..அப்படியானால்?

பாவம் சிறிலங்கா மாதா என்று அனுதாபப்படுவதைத் தவிர வேறு வழியேயில்லை...

SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

SONY

FD Trinitron

WEGA




சமதிரை (Flat TV)
தொலைக்காட்சிப்பெட்டி

சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சொனியை வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டாம்"

சீடில்ஸ்

(சி-7275)

ஏக விநியோகஸ்தர் கிங் பரட்ஸ்

இல.20, பிரதான வீதி,
வவுனியா.

T.P: 23123

SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 08



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 08

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 07



பரிசுக்குரியவர்
செ.நேசன்,
சோதனைநிலையம்,
புளியங்குளம்.

### பரிசுக்குரிய வரிகள்

அழுதது போதுமம்மா!
அரிவையர் நாம் புறப்பட்டுவிட்டோம்,
புதியதோர் புறம்படைத்து,
புனிதப்பூமி வென்றிடவே.

### பாராட்டுக்குரிய வரிகள்

தாயே நீஊட்டிய பாலுடன் மீட்டியசாதனை
உறவின்று மகிழக்கண்டேன் -விழி
ஊற்றிடும் நீரிலே பூத்தி'டும் கல்லறை
பூக்கலாய் மீண்டுணை தேற்றிடவருவேனம்மா

S.ரவீக்குமார்
யாழ் சாலை,
முறிகண்டி.

வீர மகளை விதைத்துவிட்டு
வர உருகுதோ? உன் மனம்,
கலங்காதே என்று, உனைத்
தேற்றிட வரிப்புலியொன்று தழுவுது போலும்

R.டிலக்ஷன்,
33 திருநகர்,
கிளிநொச்சி.

.முலையூட்டி வளர்த்த பிஞ்சை
விலை கொடுத்தாய் விடுதலைக்கு
தலையடித்து கதறாதே தாயே
மலையென நிமிர்வோம் மாவீரர்மேல் ஆணை.

கு.தமிழ்ப்பிரியா
இல.161 சில்வா றோட்
வட்டக்கச்சி.

தாயே நீ சுமந்த உன் பிள்ளை
உன்னைச் சுமந்த மண்ணிற்காய்
போராடி மண்ணில் விதையாகி வீழ்ந்தான்
அந்த விதையின் விருட்சமே தமிழீழம் தாயே!.

செ.அன்புமதி,
புதுக்குடியிருப்பு.


உதிர்ந்து, உயர்ந்து விட்ட,
உன் உதிரத்து உறவை யெண்ணி
கலங்காதே தாயே! - உனைத் தாங்க
உள்ளன பல கரங்கள் இங்கு!

எம். சோதீஸ்,
03,வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி,

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம்
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.



சுப்பர்சிக்ஸ் சுற்றுக்குள் நுழைவோம் என இந்திய ரசிகர் களுக்கு வாக்களித்த சச்சின் டெண்டுல்கர் அடுத்த சுற்றுக்குள் நுழைவதற்கு எழுவாரா? பாகிஸ்தான் அணியுடனான போட்டி ஒன்றில் காலில் உபாதைக்குள்ளான சச்சின்.



இது வரை நடைபெற்று முடிந்த போட்டிகளில் சிறிலங்கா அணியை வெற்றிப்பாதையில் இட்டுச்சென்ற சமிந்தவாஸ் இன்று நடைபெறும் அவுஸ்ரேலியா அணியுடனான ஆட்டத்திலும் சிறிலங்கா அணிக்கு கைகொடுப்பாரா? ஆரம்பத்தில் பங்க ளாதேஷ் உடனான போட்டியில் ஆரம்ப மூன்று பந்துகளிலுமே மூன்று விக்கட்டுக்களை வீழ்த்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார் சமிந்தவாஸ்.



இன்று நடைபெறவுள்ள சுப்பர்சிக்ஸ் சுற்றிலும் தங்களுடைய வெற்றிப்பயணத்தை தக்க வைத்துக்கொள்ளுமா அவுஸ்ரேலிய அணி? உலகக்கிண்ணப் போட்டியில் இதுவரை தோல்வியுறாது தொடர்ந்து ஆடும் அணியின் மகிழ்ச்சி ஆரவாரம்.




இப் பத்திரிக்கை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.